இதழ்-39

16.12.2021

பல்சுவை மின்னிதழ்



பெருவெள்ளத்திற்கான பயணம்

# பிள்ளையார் பிடிக்க நினைத்து குரங்காக்கி விடாதீர்கள்...!




சமகாலத்தில் சமூக வலைத்தளங்கள் ஏனைய ஊடகங்களை தாண்டி இளையோர்களின் அதிக ஈடுபாட்டை கொண்ட ஊடகமாக காணப்படுகிறது. சமூக வலைத்தளங்களும் இளையோர்களின் தேடல்களையும் சுருங்க செய்து விடுகிறது. நாலு வரிகளில் இடும் பதிவுகளை தகவலாக கடத்தும் தேடல்களற்ற இளம் சமூகத்தை சமூக வலைத்தளம் உருவாக்குவது சமூகத்தின் எதிர்காலத்தையே பெருவாரியாக சிதைக்கிறது.

அண்மையில் பேராசிரியர் ஒருவர் தனது அண்மைய மாணவர்களின் ஆய்வு சார்ந்த பரீட்சகராக அனுபவங்களை பகிருகையில், கலாநிதி ஆய்வு பட்டத்திலும் தேடல்களற்ற வெறும் சுருக்கமான தகவல்களுடன் கலாநிதி பட்ட ஆய்வேடுகளை சமர்ப்பிப்பதாக வேதனையை பகிர்ந்தார். சமூக ஊடகங்களோடு அதிகம் உறவாடும் இன்றைய இளைய சமூகம் இவ்வாறான ஆய்வுகளற்ற தேடல்களற்ற சமூகமாகவே உருவாகி வருகிறது.

தேடலற்ற உலகை உருவாக்கும் சமூக வலைத்தளங்களில் தகவல்களை பகிருகையில் சமூகப்பார்வையுடன் போட வேண்டிய தேவை காணப்படுகிறது. சமூகப்பொறுப்பற்ற வகையில் அண்மையிலோர் பதிவொன்று சமூக வலைத்தளத்தில் கடத்தப்பட்டிருந்தது. அதாவது ஆறுமுக நாவலரின் அபிமானிகள் நாவலரின் 200வது ஆண்டுக்கான கொண்டாட்டாங்களை தயார்ப்படுத்துகையில் சில பேஸ்புக் தளங்களில் நாவலர் தொடர்பான எதிர்மறையான கருத்துக்கள் மாத்திரம் உலாவியது.

ஒரு வரலாற்று தகவலை வழங்குகையில் சரியான ஆதாரங்களுடன் ஆழமான ஒப்பீடுகளுடன் பகுப்பாய்வுகளுக்குட்படுத்தி தரவுகளை பகிர வேண்டும். எதிர்மறையான கருத்துக்களை மாத்திரம் பகிருகையில் பகிர்பவரை தொடரும் இளம்பராயத்தினரிடம் நாவலர் தொடர்பான எதிர்மறையான கருத்துக்கள் மத்திரமே ஆழமாக பதியக்கூடியதாக காணப்படும். இது நாவலர் வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் மகிமைகளை மழுங்கடிக்கச்செய்கிறது. இது வரலாற்றை திரிவுபடுத்தக்கூடியது. இது நாவலர் ஓர் அண்மைய எடுத்துக்காட்டேயாகும். இவ்வரலாற்று திரிபுகள் பல கோணங்களில் இடம்பெறுகிறது.
ஆயுதங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். தவறான பிரயோகம் இழப்புக்களையே அதிகரிக்கும்.

***நல்லதோர் வீணை செய்தே...<br>அதை நலங்கெட<br>புழுதியில் எறிவதுவோ?***



www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்
த. அபிவர்ணா

**வடிவமைப்பாளர்**
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

## இவ்விதழில் துமித்துளை...



04 பனி போல படர்வாயோ...
06 சிங்ககிரித்தலைவன்
09 திரும்ப வந்துட்டேன்னு சொல்கிறதா அமெரிக்கா!
14 காதல் கண்ணா
15 மாதங்களில் நான் மார்கழி
17 பிரண்டையின் மருத்துவம்
20 நாம் எங்கே போகிறோம்?
22 பிள்ளை யார்?
27 ஐயப்பன் விரதமும் இளைஞர்களின் வகிபங்கும்
30 சித்திராங்கதா
35 குறுக்கெழுத்துப்போட்டி
36 ஈழச்சூழலியல்
40 பழைய பாட்ஷாவாக வருவாரா?





எமது வாசகர்களுக்கு...

**நத்தார் தின வாழ்த்துக்கள்**



# பனி போல படர்வாயோ...

மார்கழி மகத்துவமான மாதம். மாதங்களில் நான் மார்கழியாக இருப்பதாக பகவான் கிருஷ்ணர் சொல்வதாக கீதை சொல்கிறது. இந்துக்களுக்கு மட்டுமல்ல கிறிஸ்தவர்களுக்கும் மார்கழி முக்கியமானது. பாவிகளை இரட்சிக்க வந்த இறை மீட்பரான யேசுபாலன் அவதரித்ததும் இந்த புண்ணிய மாதத்தில்த்தான். மார்கழி மதங்களுக்கு அப்பாற்பட்ட மாதம்! அதனால்த்தான் எல்லோருமே கொண்டாடித் தீர்க்கிறார்கள். பரிசுகளோடு நத்தார்ப்பாப்பா இல்லாதவர்களுக்கும் இன்பம் அளித்து எங்குமே கொண்டாட்டத்தை கொண்டுவருகிறார். ஆனால் ஒரு சந்தேகம்!

ஒரு வருடத்தின் இறுதி ஏன் இவ்வளவு கொண்டாடப்பட வேண்டும்?

ஒரு இறுதித் தீக்குச்சி கவனமாகப் பற்ற வைக்கப்படுவது போன்ற அக்கறையை இந்த மாதம் பெற்றிருக்கிறதா? ஒரு இறுதிச் சந்திப்பு கண்ணீரால் நனைக்கப்படுவது போல இந்த மாதம் அன்பால் தாலாட்டப்படுகிறதா? இறுதிச் சொட்டுத் தேநீர் தரும் தித்திப்பைத்தான் இந்த மாதம் தருகிறதா?

இல்லை! இல்லவே இல்லை! இறுதிக்கான மரியாதையையே கெடுத்துவிட்டுப் போகிறதே இந்த டிசம்பர்! மதங்களுக்கெல்லாம் பிடித்த மாதம் என்பதால் மதம் பிடித்து விட்டதோ என்னவோ? மதத்தையும் மாதத்தையும் தாண்டிய ஒன்றுதான் அந்த இறுதிக்கான மரியாதையை மார்கழிக்கு மறுத்திருக்கிறது. எது அது? மனம்!

இந்த டிசம்பரை இந்த வருடத்தின் இறுதி என்று காலம் சொல்லலாம். ஆனால் அடுத்த டிசம்பரும் வரும் என்று மனம் சொல்கிறது. அடுத்த டிசம்பர் வரை என் உயிர் இருக்கும், இந்த உலகம் இருக்கும் என்று இந்த மனம் நம்புகின்றது. அதனால் இந்த



டிசம்பர் எனக்கு இறுதி இல்லை என்று எல்லோருமே நம்புகிறோம். நாளைய விடியலே நம் கையில் இல்லாத பிரபஞ்ச உண்மையை உணர்ந்திருந்தும் வெள்ளை மனம் நம்மை நம்ப வைக்கிறது.

மனதுக்கும் நிறமுண்டா? அது என்ன வெள்ளை மனம்?

வெள்ளை நிறம் என்றால் தூய்மை. வெள்ளை மனம் என்றால் நல்லமனம். மற்றும் பூமியில் உள்ள யாவிலும் வெண்மை என்பது மேலானது தான்.

வெண்மைக்குள் பல நிறங்கள் அடக்கம். அதுபோல் அதற்குள் பலபொருளும் அடக்கம். தூய்மை, மென்மை, இல்லாமை, பனி, பனிக்கட்டி, சொர்க்கம், அமைதி, வாழ்க்கை, சுத்தம், காற்று, ஒளி, மேகங்கள், வெறுமை, உறைபனி, நல்லவை, பருத்தி, தேவதைகள், குளிர்காலம், அப்பாவித்தனம் என்று வெண்மையின் விம்பங்களை சொல்லிக்கொண்டே போகலாம்.

இயற்கையில் நாம் காண்கின்ற அத்தனை நிறத்தையும் மூடி மறைத்து இந்த பூமியை மீண்டும் புனிதப்படுத்த வெண்மை நிறம் அமைதியாய் முன்னெடுக்கின்ற போராட்டம் ஒன்றையே அட்டையில் காண்கிறீர்கள்.

அன்பு என்ற மழையிலே அகிலம் முழுதும் நனையவே அவதரித்தார் இறைதூதர் யேசுபாலர் இம்மார்கழியில். அவர் பிறப்போடு இந்தப்பூமி புனிதப்பட்டுப்போனது என்பது சத்தியமே என்பதை அட்டைப்படம் அழகிய சாட்சியாய் நமக்கு நினைவுபடுத்துகிறது.

யேசுபாலன் பாவங்களை மன்னித்து மனங்களை வெள்ளையாக்கியது போல பனியும் தரையின் வண்ணங்கள் யாவையும் மறைத்து வெண்மையாக்குகிறது.

ஆனால் இந்த அட்டைப்பட சாட்சிப்படி நமக்கு புரியவேண்டிய உண்மை என்பது வெள்ளைப்பனியின் போராட்டத்திற்கு சற்றும் இடந்தராது இருப்பது நம் வேகம் மட்டுமே ஆகும். நம் பயணத்தின் வேகத்தால் எம் பாதைகள் தொடர்ந்தும் தெளிவாகவே தெரிகின்றன. ஆனால் பாதைகள் புனிதமாவதற்குத்தான் அவகாசம் அற்றுப்போகிறது. நமக்கு பாதை தெரிவதிலுள்ள அவசரத்தில் பலநேரங்களில் புனிதத்தை புரிந்து கொள்ள மறுத்துவிடுகிறோம்.

நின்று நிதானமாய் பார்த்தால் இறைதூதனால் இந்த கிறித்தவப்பெருநாளில் யாவும் புனிதப்படும். பொறுமை போதுமான அளவு இருந்தால் நம் பாதைகளும் புனிதப்படும்.

***வண்ணத்தோடு எண்ணமும் வெண்மையாகட்டும்.***
***அனைவருக்கும் நத்தார் கொண்டாட்ட நல்வாழ்த்துக்கள்.***




## பலன் என்ன?

நூறு ஆண்டுகளுக்கு மேலாக நன்கு வளர்த்து திரண்டு உயர்திருந்த மருத மரத்தின் வேர்கள் நன்கு உயர்ந்து (விரித்து வைத்த கையின் கைவிரல் இடுக்குகள் போல), விரிந்து கிடந்தது. அதன் மேலே மரத்தின் ஒரு கயிறைக் கட்டி அதில் இருந்து ஓலைப்பாய் ஒன்றைக்கட்டி மரத்தின் அடியில், அந்த மருதமரத்தையே ஆதாரமாகக் கொண்டு இரு கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தது. முகலனும், மகாநாமரும் வந்த மாட்டு வண்டிகள் அருகிலே கட்டப்பட்டிருந்தன. காளைமாடுகள் அந்த வண்டிகளுக்கு அருகிலேயே படுத்திருந்து அசைமீட்டு இரைமீட்டுக் கொண்டிருந்தன. கண்ணுக்கு எட்டிய தூரத்தில் எந்த வெளிச்சமும் இல்லை. வானத்தில் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன.

அமைக்கப்பட்ட கூடாரத்தில் முகலன் பயண அசதியினால் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். இரண்டு பேர் வெளியிலே காவலுக்கு அமர்ந்திருந்தனர். அவர்களும் சிறுது நேரத்தில் அசதியால் உறங்கிவிட்டனர். இந்த மருதமரத்தில் ஒரு ஆந்தை அமர்ந்திருந்து இடையிடையே ஒலி எழுப்பிக் கொண்டிருந்தது! சில் வண்டு ஒன்று தூரத்தில் இரைந்து கொண்டிருந்தது. அவர்கள் கூடாரம் அமைத்திருந்த மரத்திற்கு அப்பால் ஒரு கறுத்த மனித உருவம் மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டிருந்தது. அதன் கையில் கூரான சிறிய கோடாரி ஒன்று கறுத்த துணியால் மூடப்பட்டு இருந்தது. இப்போது இந்த உருவம் மருதமரத்தின் அடிப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தை நோக்கி நகர்ந்து வந்தது.

மங்கியபடி எரிந்துகொண்டிருந்த தீப்பந்தத்தின் ஒளியில் அந்த உருவத்தின் முகம் அவ்வளவாகத் தெரியவில்லை. ஆனாலும் அது மீகாரனின் முகத்தைப் போலவும், காசியப்பனின் முகத்தைப் போலவும் தெரிந்தது! ஆனால் அவர்கள் அந்த இடத்தில் தோன்றுவதற்கு தான் சந்தர்ப்பம் இல்லையே....... இல்லை! அந்த முகம் மீகாரனின் முகசாயலையும் காசியப்பனின் முகசாயலையும் ஒத்திருந்த வேறொருவனின் முகம் தான்!

அந்த உருவம் ஒரு கூடாரத்தின் ஓலைப்பாயை மெல்ல நகர்த்தி உள்ளே உற்று பார்த்தது. அதற்குள்ளே மகாநாமர் ஆழ்ந்த உறங்கிக்கொண்டிருந்தார். சற்று நகர்ந்த அந்த உருவம் முகலன் உறங்கி கொண்டிருந்த கூடாரத்தின் ஓலைப் பாயை சற்று விலக்கி பார்த்து விட்டு, மெல்ல உள்ளே தன்னை நுழைத்து, கையில் இருந்த தன் கோடாரியை மெல்ல எடுத்து ஓங்கி முகிலனின் மார்பில் இறக்கியது! முகலன் தன் நெஞ்சில் கையை வைத்து பொத்தியபடி அலறினான்! ஆந்த கறுத்த உருவம் பயங்கரமாக சிரித்தது! அந்த சிரிப்பு சற்று சாந்தமாகி, கலகலவென்ற சிரிப்பாக மாறியது!

“ஆ...... குழலி...... குழலி...."

“ஆம் இளவரசே மீண்டும் அச்சம் கொண்டுவிட்டீர்கள்? இதுவும் குங்குமக் கரைசல் தான் குருதி அல்ல!”

என்றபடி குழலி மறைந்தாள்! முகலன் திடுக்குற்று எழுந்து, தன் கையால் காற்றைத் துளாவினான்! குழலி ஏற்கனவே செய்த குறும்பும் மாநாமாரின் எச்சரிக்கையும் சேர்ந்து இப்பிடி ஒரு கனவாக பரிணமித்துள்ளது என்பதை உணர்ந்த முகலன், எதோ உணர்வு பெற்றுத் திடீரென எழுந்து கூடாரத்தின் வெளியே வந்து மகாநாமாரின் கூடாரத்தை சற்று நகர்த்திப் பார்த்தான்!

மகாநாமர் முகலனின் முனகலால் கூட தன் உறக்கம் கலையாமல் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்! முகலன் நின்மதிப் பெருமூச்செறிந்தான்! வானத்தில் மின்னும் நட்சத்திரங் களைப் பார்த்தபடியே வண்டிலின் அருகில் வந்து பானையில் இருந்த நீரை எடுத்துப் பருகித் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்! ஆனாலும் அந்தக் கனவின் தாக்கம் அவனை விட்டு அகன்றபாடில்லை! யாருக்காவது தன் கனவினை சொல்லி ஆறவேண்டும் போலிருந்தாலும், அதற்கு சந்தர்ப்பமும் இல்லை! இந்த நேரத்தில் மகாநாமரையோ, மற்றவர்களையே துயிலெழுப்புவது அவ்வளவு நன்றாக இருக்காது என்பதை அறிந்தான்! இன்னும் சிறிது நேரத்தில் விடிந்துவிடும் போல் முகலனுக்கு தோன்றியது!

தூரத்தில் எங்கோ சேவல் ஒன்று கூவும் சத்தம் தொலைவில் குடியிருப்புக்கள் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தியது. இதமான குளிர்காற்று ஒன்று மெல்ல வீசிப்போனது! ஆதன் ஸ்பரிசம் அவனுக்கு குழலியை நினைவுபடுத்தியது!

இந்தக் கொடூரமான கனவு கூட குழலியின் கலகலப்பான சிரிப்பில் நிறைவடைந்ததால் முகலன் சற்று குழம்பிப் போயிருந்தான்! அது தன்னைக் கொல்ல வந்த உருவம் குழலியாக மாறியதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியாமலும் இருந்தது!

பொதுவாகவே சிங்கள அரச வம்சத்தவர்கள் கனவுகளையும் சகுன நிமித்தங்களையும் சோதிடர்கள் மூலம் அறிந்து கொள்வார்கள்! தாதுசேனரும் இப்படியாக பல சந்தர்ப்பங்களில் பலன் பார்த்ததை முகலன் அறிந்திருந்தான்! முகலன் பாரதத்திற்கு முன்னர் வந்தபோதும், கெட்ட கனவு ஒன்றைக் கண்டிருந்ததாகவும், நாட்டுக்கு திரும்பும் படியும் ஓலை அனுப்பியது முகலனுக்கு மறந்து போகக்கூடிய ஒன்றும் இல்லை!

தனக்கு வரப்போகும் ஆபத்தை குழலி தடுப்பாள்! அதையே இக் கனவு உணர்த்துகிறது என்று தனக்குத்தானே முகலன் சமாதானப்படுத்திக் கொண்டபோது ஓரளவு விடிந்துவிட்டது! அதே நேரம் குழலியின் பேச்சை நம்பிய மல்லன் குழு மதுரையை நோக்கிப் புறப்பட தயாராகிக் கொண்டிருந்தது.

*பயணம் தொடரும்......*

## விமானத்தை தள்ளிய பயணிகள்


நேபாளத்தின் கோல்டி விமான நிலையத்தில் டாரா ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் விமானம் ஒன்று தரையிறங்கும்போது, ஓடுபாதையில் திடீரென அதன் பின்புற டயர் வெடித்து நின்று விட்டது.




இதற்கிடையே மற்றொரு விமானம் அங்கு வந்து தரை இறங்க முடியாமல் வானில் வட்டமடிக்கும் சூழல் உருவானது.

இதனை அவதானித்த அங்கிருந்த பயணிகளும், பாதுகாப்பு படையினரும் ஓடுபாதையில் நின்று விட்ட அந்த விமானத்தை அங்கிருந்து தள்ளிக்கொண்டு போய் அது நிற்க வேண்டிய இடத்துக்கு கொண்டு போய் நிறுத்தினர்.

இந்த வினோத காட்சியை அங்கிருந்தவர்கள் தங்கள் செல்போனில் படம் பிடித்து சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளனர்.





# திரும்ப வந்துட்டேன்னு சொல்கிறதா அமெரிக்கா?

சுபீனா குணரத்தினம்

அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதலில் அல்கெய்தா தீவிரவாதி களுக்கு ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆதரவளித்ததனால் அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்தது கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் ஆட்சி செய்தது. கடந்த ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி முழுமையாக அமெரிக்கா இராணுவம் மேற்கொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் வெளியேறியது.

20 ஆண்டுகளாக தேவையற்ற 822 மில்லியன் அமெரிக்க டெலர் பண விரயம் மேலும் பத்தாயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் இறந்துள்ளார்கள் என்பதனையே காரணம் காட்டி வெளியேறியது அமெரிக்கா. கத்தார் நாட்டில் டோஹா தலைநகரில் அமெரிக்கா தலைவர்களுக்கும் தலிபான்களுக்கும் இடையே கடந்த மாதம் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. அதில் ஆப்கானிய மண்ணை பயங்கரவாதத்திற்கு பயன்படுத்தக்கூடாது எனவும் கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் மற்றும் மனிதாபிமான உதவிகளை விநியோகம் செய்ய அமெரிக்கா தலிபான்களுக்கு உதவுவதாகவும் கூறியுள்ளது.

மேலும் "நாம் தலிபான்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தி வருகின்றோம்



என்பதற்காக அவர்களை அங்கீகரிப்பதாக ஆகாது.” என்றும் கூறியுள்ளது அமெரிக்கா. இதனை நம்ப முடியுமா என்கின்ற கேள்வி உங்களிடமும் பலருக்கு எழலாம். ஆனால் நான் இதனை உலகநாடுகளை ஏமாற்றுகின்ற கண்துடைப்பு வார்த்தையாக கூட இருக்கலாம் என்றே கருதுகிறேன். ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய அமெரிக்கா மீண்டும் ஏன் ஆப்கானிஸ்தானிடம் இவ்வாறு பேச்சுவார்தைகள் நடாத்தி அதன் விவகாரங்களில் தலையிட காரணம் என்ன என்கின்ற கேள்வி எல்லோரிடமும் ஏற்பட்டு வருகின்றது. இது ஏன் என்கின்ற கேள்விக்கு விடை தேடுவதாகவே இக் கட்டுரை அமைந்துள்ளது.

தலிபான்கள் உலகத்திலுள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் ஆதரவளிப்பதாக கூறியிருக்கின்றார்கள். இதனால் சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் வாழ்கின்ற உய்குர் முஸ்லிம்களுக்கு எப்போதும் சீனா அரசாங்கத்தினால் பிரச்சினைகள் எழுந்த வண்ணமே உள்ளது. இதனால் தலிபான்கள் ஆட்சி அமைத்து கொண்டால் சீனாவுடன் பயங்கரவாதத்தில் ஈடுபடும்






இதனால் சீனாவின் அரசியல் சமநிலை சீர்குலையும் என்கின்ற அமெரிக்காவின் இராஜதந்திர நோக்கம் வீழ்ச்சி அடைந்தமையும் காரணமாக இருக்கலாம்.

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு பொருளாதார உதவிகள் மற்றும் மனிதநேய சலுகைகளை வழங்கும் கடமை மற்ற நாடுகளைவிட அமெரிக்காவிற்கும் வீட்டோ நாடுகளுக்குமே உள்ளது என சீனா அமைச்சர் கூறியிருந்தார். இது மறைமுகமாக அமெரிக்காவை பழி சுமத்தும் செயற்பாடாகவே இருந்தது. இவ்வாறான ஒரு கருத்தை வெளியிடும் போது அமெரிக்கா நாட்டின் மீது உலகளாவிய நாடுகள் மற்றும் அமெரிக்க சார்பு நாடுகளின் நம்பிக்கையின்மை அமெரிக்கா சம்பாதிக்க நேரிடும் என்கின்ற காரணமாக கூட இருக்கலாம்.

தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் அல்கைதா தீவிரவாதிகள் அங்கு குழுக்களாக இணைந்து வருகின்ற ஆரம்ப அறிகுறிகள் காணப்பட்டு வருகின்றதென அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளது.




காலில் உள்ள அமெரிக்க தூதரகம் பூட்டப்பட்டு ஆப்கானிஸ்தானில் செயற்பாட்டிலுள்ள பல சிபிஐ அலுவலகங்களும் மூடப்பட்டதால் அல்-காய்தா செயற்பாடு எந்த அளவிற்கு வீரியம் அடைந்துள்ளது என்பதனை தெரியாமல் இருக்கின்றது என CIA துணை இயக்குனர் தெரிவித்திருந்தார். அல்கைதா ஒரு பலமான இயக்கமாக வர இரண்டு ஆண்டுகள் தேவைப்படும். அப்போது அமெரிக்காவிற்கு எதிரான பயங்கரவாத அச்சுறுத்தல் ஏற்படக் கூடும். இதனால் அமெரிக்கா ஆப்கானிஸ்தானுக்குள் மீண்டும் நுழைந்து கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் பென்சில்வேனி யாவில் ஜோ பைடனை தீவிரவாதி போல் சித்தரித்த பெனர்கள் சாலையோரங்களில் வைக்கப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் இருந்து இராணுவத்தினை மீண்டும் அமெரிக்காவிற்குள் அழைத்த முடிவுதான் தலிபான்களின் கொடூர ஆட்சி ஏற்பட வித்திட்டுள்ளது என்கின்ற குற்றச்சாட்டினை ஜோ பைடன் மீது அமெரிக்க மக்களே கூறிவருவது அமெரிக்காவின் நன் மதிப்பினை குறைத்து வருவதோடு அமெரிக்காவின் தலைமைத்துவத்தையும் அவமதிப் பதாக அமைந்து விடுகிறது. இதனால் ஜோ பைடன் தன் ஆட்சியில் தன் மக்களுக்கே அவநம்பிக்கை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்தை மேற்கொள்ளக் கூடாது எனவும் அங்குள்ள மக்களினை வெளியேறுவதற்கும் உதவி புரிந்து வருகிறார்.

தலிபான்கள் (அமெரிக்கா - தலிபான்) ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதைப் போல தீவிரவாதிகளுக்கு இடமளிக்கக் கூடாது என்கின்ற நிபந்தனையை மீறி வருகின்றது. மேலும் பெண்களின் உரிமை மீறல், கடுமையான தண்டனைகள் போன்ற கொடுமையான ஆட்சிகளும் நடைபெறுகின்றமை. மேலும் ஆப்கானிஸ்தான் தீவிரவாதத்தின் சொர்க்கமாக மாறி வருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதனால் ஜனநாயகத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற வல்லரசு நாடு என்கின்ற அடிப்படையில் அதனை தட்டிக் கேட்கின்ற உரிமையினை விட்டுக் கொடுக்கக் கூடாது என்கின்ற ஒரு உயரிய குணத்தில்






கூட ஆப்கானிஸ்தானுக்கு மீண்டும் நுழைந்து இருக்கலாம்.

அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ் தானில் இருந்து வெளியேறிய போது அமெரிக்காவிற்கு சொந்தமான ஹெலிகாப்டர்கள், போர்க்கப்பல்கள் போன்றவற்றை செயலற்றதாக்கிவிட்டு சென்றிருந்தது. ஆனால் தலிபான்கள் ஆட்சியினை கைப்பற்றி இரண் டொரு நாட்களில் அமெரிக்க ஹெலிகாப்டரை தலிபான்கள் இயக்கும் வீடியோக்களை சமூக வலைதளங்களில் வெளியிட்டு இருந்தார்கள். இது அமெரிக்காவிற்கு ஆச்சரியமான செயலாகவும் அமெரிக்க ராணுவத்தின் பலத்தை குறைத்து மதிப்பிடுவதற்கான சூழலும் ஏற்பட்டது. இதோடு தன்னுடைய போர் உபகரணங்களினை பயன்படுத்தியே தனக்கு ஆபத்தினை ஏற்படுத்தக் கூடும் என்ற ஒரு பயம் கூட இருக்கலாம். அத்தோடு இதன் விளைவு




ஆப்கானிஸ்தானில் மட்டுமல்ல உலக சந்தையில் சிறிய ஆயுதங்களும் வரத்தொடங்கும் உலகில் உள்ள மற்ற கிளர்ச்சியாளர்களுக்கும் இது சாதகமாக அமையலாம்.

அமெரிக்கா ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறியவுடன் இளவு காத்த கிளி போல சீனா ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்துவிட்டது. அதுமாத்திர மல்லாமல் ரஷ்யா, பாகிஸ்தான் தலிபான்களுக்கு ஆதரவளித்து வருகிறது. சீனா தலிபான்களுக்கு பண உதவி அளித்து ஆப்கானிஸ்தானையும் அதன்



பெறுமதியான வளங்களையும் தன்னகத்தே அடிமையாக்கும் பணியில் செயல்பட்டு வருகின்றது. தலிபான்கள் சீனாவிற்கு முழுமையாக ஆதரவு நாடாக விளங்கினால் அமெரிக்காவினை எதிர்ப்பு நாடாக எண்ணி செயற்படும் சூழல் மிக அருகிலேயே என்பதை உணர்ந்து தாமும் ஆப்கானிஸ்தானுக்கு உதவ முன்வர வேண்டும் என்கின்ற இராஜதந்திர சிந்தனையாக கூட இருக்கலாம்.

காபூல் விமான நிலையத்தில் மக்கள் குவிந்த காட்சிகள், தீவிரவாத

தாக்குதல்கள், அமெரிக்காவின் பதிலடி தாக்குதல்கள் ஆகியவற்றை பார்த்தால் முறையான திட்டமிடலின்றி ஜோ பைடன் நிர்வாகம் செயல்பட்டதா என்கின்ற கேள்வி எழுகிறது. அத்தோடு ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா இருந்தபோதே தலிபான்களுக்கு அழுத்தம் கொடுக்க முடியவில்லை என்னும்போது தங்களின் கோரிக்கைகளையும் ஒப்பந்தத்தின் போது ஒப்புக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளையும் எப்படி பின்பற்றுவார்கள் என்று ஜோ பைடன் யோசிக்கவில்லை என்று உலக நாடுகள் குற்றஞ்சாட்டின. மேலும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் தப்பான தலைமைத்துவத்தினை தேர்ந்தெடுத்து உள்ளதாகவும் ஜோ பைடனை விமர்சித்துள்ளார். இது ஜோ பைடனின் சுயமரியாதையை கெடுக்கும் விதமாக அமைகிறது. இதனை சீர்படுத்தும் நோக்கில் ஜோ பைடன் தலிபான்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருக்கக் கூடும்.

அமெரிக்கா திடீரென்று நல்ல வேஷம் போட காரணம் தான் வல்லரசினை இழப்பதற்கு






ஆப்கானிஸ்தான் ஒரு களமாக மாறிவிடக் கூடும் என்கின்றதால் தானும் அந்த களத்தில் பங்காற்ற வேண்டும் என்கின்ற எண்ணத்தில் கூட மீண்டும் நுழைந்திருக்கலாம். மேலும் சீனா ஆப்கானிஸ்தானுக்குள் நிற்பதனால் சீனா பயங்கரவாதத்தின் சக்திகளினை பெற்று விடும் என்ற அச்சம். மேலும் ஆப்கானிஸ்தான் பிரச்சினையை களமாக வைத்து சீனா ரஷ்யா இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அமெரிக்காவின் பங்காளி நாடுகளின் நம்பிக்கையினை தம் வசமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இத்தகைய காரணங்களினால் தான் அமெரிக்க இராணுவம் ஆப்கானிதானிலிருந்து வெளியேறிய பின் மீண்டும் அமெரிக்கா ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து ஆப்கான் விவகாரங்களில் தலையிடுகின்றது என தெளிவாக ஊகித்துக் கொள்ள முடிகிறது.

19ஆம் நூற்றாண்டில் தங்களின் செல்வாக்கினை நிலை நிறுத்திக் கொள்வதற்காக பிரிட்டனும் ரஷ்யாவும் ஆப்கானிஸ்தானில்

மோதிக்கொண்டது. இதனை "மகா ஆட்டம்" என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவ் ஆட்டம் இன்னமும் நீடித்துக் கொண்டே இருக்கின்றது. தற்போது அமெரிக்கா, இந்தியா, சீனா, ரஷ்யா, துருக்கி, பாகிஸ்தான் என ஆட்டக்காரர்கள் அதிகரித்துள்ளனர் என்பதே நிதர்சனம். இந்த மகா ஆட்டக்காரர்களுக்கு இடையே சிக்கித் தவித்தது என்னமோ ஆப்கானிஸ்தான் பொதுமக்களே இவர்களின் நிரந்தரமான விடிவு என்பது அவர்களின் எட்டாக் கனியாகவே உள்ளது. அமெரிக்கா 20 வருடங்கள் ஆப்கானிஸ்தானில் இருந்ததைப் போன்று இருந்திருந்தால் ஆப்கானிய மக்களுக்கு அவல நிலையும் அமெரிக்க நிர்வாகத்தின் மீதான நம்பிக்கை இன்மையும் ஏற்பட்டு ஏற்பட்டிருக்காது. இது அமெரிக்காவின் வரலாற்றில் தோல்வியடைந்த காலப் பகுதியாகவே கருதப்படும். எனினும் இதனை சரிப்படுத்தும் முயற்சியிலும் தனது நிலையை தக்க வைக்கும் முயற்சியிலும் அமெரிக்கா ஈடுபட்டு வருகின்றது என்பதினை கண்கள் ஊடாக பார்த்து வருகின்றோம்.

# காதல் கண்ணா...!

உன் நினைவில் வாடும் பேதை - இவள்
துயர் துடைத்திட வாராயோ!
உன் சிந்தையில் ஆடும் காதை- இவள்
மனம் படித்திட வாராயோ!
உன் நெஞ்சம் தேடும் கோதை - இவள்
தஞ்சம் ஏற்றிட வாராயோ!
உன் மஞ்சம் நாடும் சீதை - இவள்
துஞ்சம் அணைத்திட வாராயோ!
உன் தோள் சேரும் ராதை - இவள்
கேட்கும் வரம் தாராயோ!
என் காதல் மன்னா!!!!

-ராதா-






*தொண்டரடிப்பொடியன்*

பனி, குளிர், தொடர் மழை என இயற்கை சோதிக்கும் பீடை மாதமா மார்கழி? இல்லை! மார்கழியை பீடை மாதம் என்று தவறாக சொல்வார்கள். பீடு என்றால் பெருமை என்று பொருள். பெருமை நிறைந்த மாதம் என்பதே மருவி பீடை என்றானது. மகத்துவங்கள் நிறைந்ததும் இறைவழிபாட்டிற்கே உரியதுமான மாதம் என்றால் அது மார்கழி தான். அதனால்தான் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்!“ என்று கிருஷ்ணனே கூறியிருக்கிறார். மேலும் அவரே, கீதையில் மார்கழி மாதத்தை தேவர்களின் மாதம் என்று சொல்கிறார்.

இத்தகைய சிறப்பு பொருந்திய மாதத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி மற்றும் திருப்பாவை என்பவற்றை பாடிப் பரவசமடைவது சிறப்பானது. குளிர் பனி ஆரம்பிக்கும் காலத்தில் காலையில் எழுவதே கடினமானதாக இருக்கும். ஆனால் அதிகாலையில் எழுந்து நீராடி கோலம் போட்டு ஆலயம் செல்வதாக கட்டமைக்கப்பட்டுள்ள எமது வழக்கங்கள் முரணாக இருக்கிறதா? இல்லை!

”மார்கழியில் குளித்துப்பார் குளிர் பழகிப்போகும் என்பார்கள்.”

மார்கழியிலேயே அதிகாலையில் எழுந்து சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கிவிட்டால் மற்றய மாதங்களில் அவை இலகுவாகி விடும். இதனால்த்தான் இவ்வாறு சொல்லி இருக்க வேண்டும்.

## திருவெம்பாவை

தேன் சொட்டச்சொட்ட மணிவாசகரால் பாடப்பட்ட திருவெம்பாவையில் மொத்தம் இருபது பாடல்கள் உள்ளன. முதல் எட்டு பாடல்கள் மகளிர்கள் ஒருவரை ஒருவர் எழுப்பிக்கொண்டு எல்லோருமாக இறைவனின் புகழினை பாடியவாறு நீராடச் செல்லுதலையும், ஒன்பதாவது பாடலில் தங்களது வேண்டுகோளை இறைவனிடம் வைப்பதையும், பத்தாவது பாடலில் இறைவனைப் புகழ்ந்து பாடும் தன்மையை கேட்டு அறிவதையும் உணர்த்துகின்றன. அடுத்த பத்து பாடல்கள் அனைவரும் சேர்ந்து நீராடுதலை உணர்த்துவதாகவும் அமைந்துள்ளன.





திருவெம்பாவையில் வரும் பெண்கள் தம் மனத்து இல்லம் தோறும் இறைவன் எழுந்தருளி இருப்பதால் எந்த குறையும் இல்லாதவர்கள். எனினும் ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ்சோதியைச் சுமக்கின்ற பரந்த மனமுடைய அவர்கள், இந்தப் பேரின்பப் பெருவழிக்கு வராது விடுபட்டுப் போன அக்கம்பக்கத்திலுள்ள தம் எல்லாத் தோழிகளின் துயில் மயக்கத்தைத் தெளிவித்து, அவருடைய உறுதியின்மையால் தாம் தளர்வுறாது, இறைவன் பால் ஒருமைப்பட்ட தம் மனத்தால் அவரையும் கண்ணுக்கினிய கருணைக் கடலான சிவபெருமானைப் பாடத் தேற்றுகின்றனர். இதுவே நமது இன்றைய தேவை. நாம் உய்யும் நெறியை உறுதியாகப் பற்றவேண்டும். அதே நேரத்தில் அவ்வாறு பற்றுவதால் நாம் பெறும் இன்பத்தை அண்டை அயலவர் எல்லோருக்கும் கிடைக்கும் வண்ணம், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என அறைகூவி அழைத்தும், எல்லோரது பேரின்ப பெருவாழ்வுக்கும் வழி காட்டுகிறார்கள்.

## திருப்பாவை

திருப்பாவை என்பது சூடிக்கொடுத்த சுடர்க்கொடி எனப் போற்றப்படும் ஆண்டாள் நாச்சியாரால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். இவர் பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வாரின் மகள்.

திருப்பாவை மொத்தம் 30 பாடல்களைக் கொண்டது. திருப்பாவையின் முதல் பாடலானது, திருப்பாவையின் தொகுப்பு பாடப்பட்டதற்கான நோக்கத்தை எடுத்துரைக்கும் வகையில் சுருக்கமாக அமைந்துள்ளது. அதைத் தொடர்ந்து வரும் 2 முதல் 5 வரையான பாடல்கள், திருப்பாற்கடலில் பள்ளிகொண்டுள்ள நாராயணரின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது.

ஆறு முதல் பதினைந்து வரையான துதிப்பாடல்கள், ஆழ்வார்களுக்கு ஒப்பாக, பெண் தோழியர்களை கற்பனை செய்து கொண்டு அவர்களை எழுப்பி, நீராடிவிட்டு கோவிலுக்கு செல்வதை சொல்கிறது. அடுத்து வரும் பதினைந்து பாடல்களும், "உன்னையே கணவனாக எண்ணிக் கொண்டுள்ள என்னை ஏற்றுக்கொள்" என்று வெண்ணெய் உண்டவனை நினைத்து உருகிப்பாடுவதாக அமைந்திருக்கிறது.

இத்தகைய தெய்வீக பாசுர பாராயணங்களோடு மார்கழி மாதத்தை வரவேற்போம்.

சிந்துஜா தவராசா



# பிரண்டையின் மருத்துவம் 2

(சென்ற இதழின் தொடர்ச்சி)



### பிரண்டையின் பாவனை முறை

பிரண்டைத் துண்டுகளை சேகரித்து மேல் தோலை சீவி சிறு துண்டுகளாக நறுக்கி தேவையான அளவு நெய்யில் வதக்கி தேவையான அளவு புளி, உப்பு, காரம் சேர்த்து அரைக்கவேண்டும். பின்பு கடுகு, உளுந்து சேர்த்து தாளித்து துவையல் செய்து சாதத்துடன் சேர்த்து பிசைந்து சாப்பிட்டு வர இரத்த மூலம் குணமாகும். அத்தோடு வயிற்றுப் பசியையும் கட்டுப்படுத்தும்.

பிரண்டைத் துவையல் செய்து அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ள பழகிக் கொண்டால் உடல் சுறுசுறுப்பு அதிகரிக்கும், ஞாபக சக்தி பெருகும், மூளை நரம்புகள் பலப்படும்.



நன்றாக முற்றிய பிரண்டைத் துண்டுகளை சிறு துண்டுகளாக நறுக்கி மோரில் போட்டு தேவையான அளவு உப்பு சேர்த்து ஊற வைத்து உலர்த்தி வற்றல்களாக செய்து அதனை எண்ணையில் பொரித்து சாப்பிட பசியின்மை நாக்கு சுவையின்மை ஆகியன குணமாகும்.

பிரண்டையில் இருந்து சாறெடுத்து ஆறு தேக்கரண்டி அளவு சாற்றுடன் ஒரு தேக்கரண்டி நல்லெண்ணெய் கலந்து காலையில் மட்டும் ஒரு வாரம் சாப்பிட்டு வர மாதவிடாய் சீராக அமையும்.

பிரண்டைத் துவையலை குழந்தைகளுக்கு தொடர்ந்து கொடுத்து வர எலும்பு உறுதியாகும். மேலும் எலும்பு முறிவு ஏற்பட்டால் உடைந்த எலும்புகள் விரைவில் சேரவும் உதவுகிறது.

பிரண்டையை நன்கு காயவைத்து தூளாக்கி நீரில் குழைத்து எலும்பு முறிவு உள்ள பகுதியில் பூசி வரலாம்.

பிரண்டையின் வேரை உலர்த்தி பொடி செய்து வைத்து காலை மாலை 10 கிராம் அளவு சாப்பிட்டு வருவது சிறப்பாகும்

பிரண்டையில் இருந்து சாறு எடுத்து புளி, உப்பு சேர்த்து காய்ச்சி பொறுக்கும் சூட்டில் அடிப்பட்ட இடத்தில் மேல்பூச்சாக பற்றுப்போட அடிபட்ட வீக்கம் குணமாகும், பசியை தூண்டும், இரத்தக்கழிச்சல், அஜீரணம் ஆகியவற்றை குணமாக்கும்.

### நோய் எதிர்ப்பு சக்தி

பிரண்டை காரச் சத்து அதிகம் நிறைந்த ஒன்று எனவே இதில் உள்ள சத்தானது நமது இரத்தத்தில் கலந்து உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகிறது. மற்றும் வைரஸ் போன்ற ஒருசில கிருமிகளால் ஏற்படக்கூடிய நோய் போன்றவற்றையும் ஏற்படாமல் தடுக்கக் கூடிய தன்மை கொண்டது.

### பற்கள் உறுதி

பற்களுக்கு உறுதி அளிக்கிறது. இனிப்பு அதிகமுள்ள பொருட்களை உண்பதாலும் உடலில் ஏற்படும் சத்து குறைபாட்டாலும் பற்களில் சொத்தை





ஏற்படுதல், பற்களின் ஈறுகளில் ரத்தம் வடிதல் போன்ற பிரச்சினைகளுக்கு பிரண்டையை அடிக்கடி உணவுடன் சேர்த்து சாப்பிட்டு வருபவர்களுக்கு பற்கள் சம்பந்தமான அனைத்து பிரச்சனைகளும் குணமாகும்.

### வாயு பிரச்சனைக்கு தீர்வு

இன்று பலரும் சரியான உணவின்மை காரணமாக வாயுத்தொல்லைக்கு ஆளாகின்றனர். வயிற்றில் வாயு கோளாறு ஏற்பட்டு அவதிப்படுபவர்கள் வாரம் ஒருமுறை அல்லது இருமுறை பிரண்டைத் துவையலை சாப்பிட்டு வந்தால் வாயுத் தொல்லை, அஜீரணக் கோளாறுகள் நீங்கும்.

### எலும்பு ஆரோக்கியம்

பிரண்டையின் சிறப்பு என்னவென்றால் எலும்பு தொடர்பான பாதிப்புகளிற்கு சிறந்த நிவாரணமாக இருப்பது தான் மிக முக்கியமான காரணமாகும். எலும்பு தேய்மானம் உள்ளவர்கள் பிரண்டை ரசம் வைத்து சாப்பிட்டு வருவது எலும்புகளின் ஆரோக்கியத்திற்கு மிக நல்லது. எலும்பு முறிவின் காரணமாக அவதிப்படுபவர்கள் பிரண்டையை எடுத்து வாரத்தில் ஒரு முறையாவது துவையலாக செய்து சாப்பிட்டு



வந்தால் உடைந்த எலும்புகள் வேகமாக கூடும்.

### கொழுப்பினை குறைக்கும்

பிரண்டை உடலில் தங்கும் கொழுப்புக்களை கரைக்கும் தன்மை கொண்டது. பிரண்டையை பக்குவப் படுத்தி சாப்பிடுவதன் மூலம் அதில் உள்ள அனைத்து சத்துக்களும் ரத்தத்தில் கலந்து நரம்புகளில் இருக்கக்கூடிய கொழுப்புகளினை கரைகிறது. மேலும் அடைப்புகள் எதுவும் ஏற்படாமல் தடுக்கிறது.

### சர்க்கரை நோய் நிவாரணி

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த இயற்கை உணவுகளில் ஒன்றாக பிரண்டை இருக்கின்றது. இதில் நிறைந்திருக்கும் காரத்தன்மை உடலில் ஓடும் ரத்தத்தில் உள்ள சக்கரை அதிகரிக்காமல் தடுக்கிறது.

### மூலம் இனி நிர்மூலம்

ஆசன வாயில் உள்ள சதையிலும் ஆசன வாய்க்குள்ளும் ஏற்படக்கூடிய ஒரு பாதிப்புதான் மூலம். மூலம் பாதிப்பின் காரணமாக அவதிப்படுபவர்கள் தினசரி பிரண்டை துண்டுகள் எடுத்து நெய்யில் வதக்கி சாப்பிட்டு வருவதன் மூலமாக மூலம் மிக விரைவில் குணமாகும்.

### உடல் வலி நிவாரணி

மிக முக்கியமாக பிரண்டை அனைத்து விதமான வலிகளையும் நீக்குகிறது. மூட்டுவலி, இடுப்புவலி போன்றவைக்கும் பிரண்டை துவையல் செய்து மூன்று வாரம் தொடர்ந்து சாப்பிடுவது சிறப்பாகும்.

நெடுங்காலமாக நம் உணவு முறையில் முக்கிய பங்கு வகித்த பிரண்டை மருத்துவத்துக்கு மட்டுமல்லாது வாழ்வில் பல இடங்களில் செல்வாக்குப் பெறுகிறது. சடங்குகளிலும் விழாக்களிலும் பிரண்டையின் செல்வாக்கு காணமுடிகிறது.

கன்று போட்ட பசு மாடு அல்லது எருமை கன்று எலுங்கொடி விழாவிட்டால் தொங்கிக் கிடக்கும் எலுங்கொடியில் பாரமாக பிரண்டை கொடி சேர்த்து வைத்துக் கட்டுவார்கள் .

பிள்ளை இல்லாதவர்களைப் பார்த்து, “பிள்ளை இல்லேன்னா பெரண்டை கொடியை அடிவயிற்றிலே



கெட்டிக்கிட்டு படு” என சொல்லும் பழமொழி வழக்கில் உள்ளது.
வாக்கு சொல்லும் சில இடங்களிலும் தேசிக்காயைப் போன்று பிரண்டை தண்டை பயன்படுத்திக் கொள்ளும் வழக்கம் இன்றும் காணப்படுகின்றது. திவச சடங்கின் போது ஐயருக்கு கொடுக்கும் பொருட்களில் பிரண்டை தண்டு வைத்துக் கொடுக்கும் வழக்கமும் காணப்படுகிறது.

பொங்கல் பண்டிகைக்கு முன் நடைபெறும் போகிப்பண்டிகை எனப்படும் காப்புகட்டில் ஆவரை, சிறுபீளை, வேப்பிலை ,மாவிலை, தும்பை, பிரண்டை போன்றவை பயன்படுத்தப்படும்.

எமது அன்றாட வாழ்வில் பிரண்டை போன்று வலிமை பொருந்திய சித்த மருத்துவங்களின் மகிமை அறியாது அவற்றினை மழுங்கடிப் பதனாலே ஆரோக்கியமற்ற வாழ்வோடு போராடுகிறோம். காலம் தாழ்த்தினாலும் பெரும் நன்மை பயக்கும் திறன் கொண்ட சித்தமருத்துவம் என்றும் வாழ்வை செம்மைப்படுத்தும் சிறப்பு வாய்ந்ததாகும்.

## செய்தித் துளிகள்



● லண்டனில் தை மாதம் தமிழ் மரபுரிமை மாதமாக கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

● உலகின் முதல் உயிருள்ள, குழந்தைகளை பெற்றெடுக்கும் ரோபோக்களை உருவாக்கி அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை.

● உலகின் மிக அதிக செலவு கொண்ட நகரங்கள் பட்டியலில் இஸ்ரேல் நகரங்களில் ஒன்றான டெல் அவிவ் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. பாரீஸ், சிங்கப்பூர் ஆகிய நகரங்கள் கூட்டாக இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளன.



● ட்விட்டர் தலைமை செயல் அதிகாரியாக இந்தியரான பராக் அக்ரவால் நியமனம்.

● 2021 இன் மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை இந்தியாவின் ஹர்னாஸ் சந்து வென்றுள்ளார். 21 ஆண்டுகளில் முதன்முறையாக இந்தியர் ஒருவர் மிஸ் யுனிவர்ஸ் பட்டம் வென்றுள்ளார்.

# நாம் எங்கே போகின்றோம்???

பிரசாந்தி ஜெயபாலன்

பாதைகள் பலதும் நம்
பார்வையின் முன் நீள
பாவவழி பலர் நாட
பாவியராய் சிலர் இங்கு...

போய்த்தொலையும் நாட்கள்
போகின்ற போக்கினிலே
போதையிலே பலர் வீழ
போதகராய் சிலர் இங்கு...

கலிகாலம் முற்றியதாய்
களவு, பொய், கற்பழிப்பென
கரியவழி பலர் நடக்க
கலைக்காலம் கனிந்ததென
கடமை, கண்ணியம், கட்டுப்பாடாய்
கனவுவழி சிலர் இங்கு....

எப்படியும் வாழ்வோமென
எட்டிப்பலர் நடக்க
இப்படித்தான் இருப்போமென
இயங்குகின்றார் சிலர் இங்கு...

நாம் எங்கே போகின்றோம்?
போவதற்கு முதலில்
நாம் இங்கு எங்கே??
நாற்றிசை தோறும்
நான்.. நான்.. நான் மட்டுமே...

நான் இறந்து
நாம் பிறப்பின்,
அல்லவை அகன்று
நல்லவை அவதரித்து
நம் பயணம் என்றும்
நற்பயணம் ஆகிடுமே...






சினமிகா

# புதிர் 18
# பிள்ளை யார்?

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்திலேறி அதில் தொங்கிய உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் அவன் கீழே இறங்கி, அதைத் தூக்கிக் கொண்டு மயானத்திலிருந்து செல்லுகையில், அதனுள்ளிருந்த வேதாளம் விக்கிரமனை நோக்கி,

“மன்னா! இரவு, பகல் பாராமல் இந்த மயானத்தில் நீ இத்தனை கடுமையான முயற்சி செய்வது யாருக்காக? உன்னுடைய ஏதாவது லட்சியம் நிறைவேறுவதற்கா, அல்லது வேறு யாருக்காகவோ செய்கிறாயா? உனது செயல்களைப் பார்க்க எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. கிருபானந்தா என்ற வஞ்சக யோகி ஒருமுறை மூவரை சிரமப்படச் செய்தான்.அவன் கதையைக் கூறுகிறேன் கேள்!”

எனக்கூறி விட்டு ஒரு சுவாரசியமான புதிரை சொல்ல ஆரம்பித்தது.

ஒரு கிராமத்தில் ராமன், பீமன், சோமன் என்று மூன்று வாலிபர்கள் நண்பர்களாக இருந்தனர். ராமன் கல்வியறிவு உள்ளவன்! பீமன் மல்யுத்தத்தில் கெட்டிக்காரன்.



சோமன் தண்ணீரில் மூழ்கிப் பல வித்தைகளை செய்யக் கூடியவன்! மூவரும் தங்களுடைய பலவித வித்தைகளின் திறமையினால் அந்த கிராமத்து மக்களின் ஆதரவுடன் சொற்ப வருமானம் பெற்றுக் காலம் கழித்தனர்.

ஒரு சமயம் கிராமத்தில் பஞ்சம் ஏற்பட்டதால், அவர்கள் வேலை தேடி ஸ்ரீநகரை அடைந்தனர்.

ஸ்ரீநகரில் ஈஸ்வரன் என்ற ஜமீன்தார் வசித்து வந்தார். ஒரு சமயம் அவர் வீட்டிற்கு கிருபானந்தா என்ற யோகி வருகை தந்தார். ஜமீன்தாரின் உபசாரங்களினால் திருப்தியடைந்த யோகி

"உன் மருமகள் விரைவிலேயே ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பாள்."

என்று வாழ்த்தினார். உடனே, ஈஸ்வரனின் மனைவி,

"சுவாமி! எங்களுக்குக் குழந்தையே இல்லை. அப்படியிருக்க பேரன் எப்படிப் பிறப்பான்?"

என்று கேட்டாள். சற்று நேரம் கண்களை மூடி யோசனையில் ஆழ்ந்த யோகி,

"அம்மா! அது தெய்வ வாக்கு. நீங்கள் யாராவது ஒரு வயது வந்த வாலிபனை தத்து எடுத்து அவனுக்குத் திருமணம் செய்து வையுங்கள். அவனுக்கு விரைவிலேயே குழந்தை பிறக்கும்!"

என்றார் யோகி. சரியாக அந்த சமயத்தில் ராமன், பீமன், சோமன் ஆகிய மூவரும் ஈஸ்வரன் வீட்டுக் கதவைத் தட்டினார்கள்.

ஈஸ்வரன் கதவைத் திறந்ததும், அந்த மூவரும் தங்களை அறிமுகம் செய்து கொள்வதற்கு முன்பாகவே, கிருபானந்த யோகி அவர்களைப் பெயரிட்டு அழைத்து அவர்கள் அங்கு வந்திருப்பதன் நோக்கத்தையும் கூறினார். அதை அவர்கள் மூவரும் ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருக்க யோகி தொடர்ந்து,

"இந்த ஜமீன்தாருக்கு குழந்தை பாக்கியம் இல்லை. அவருடைய மனைவி கர்ப்பமாக தசரத மலையில் உள்ள வசிஷ்ட மரத்திலிருந்து பழம் கொண்டு வந்து கொடுங்கள். அதை சாப்பிட்டால் அவள் தாயாவாள்! ஆனால் தசரத மலையைப் பற்றிய ஒரு சிறிய தகவல் மட்டும் என்னால் தரமுடியும். அது மேற்குத் திசையில் இல்லை. அதனால் மற்ற மூன்று திசைகளிலும் ஆளுக்கு ஒரு திசையாகச் சென்று தேடுங்கள். இரண்டு மாத காலத்திற்குள் யார் முதலில் அந்த வசிஷ்ட மரத்திலிருந்து பழம் கொண்டு வருகிறானோ, அவனுக்கு ஜமீன்தார் தனது சொத்தில் பாதியையேக் கொடுத்து விடுவார். மூன்று மாதக் காலத்திற்குள் ஒருவராலும் கொண்டு வர முடியவில்லையெனில், மூவரும் திரும்பி வந்து விடுங்கள். மூவரில் யார் மிகவும் கடுமையாக முயற்சி செய்தானோ அல்லது கஷ்டமான வேலை செய்தானோ, அவனை ஜமீன்தார் தனது சுவிகாரப் புத்திரனாகத் தத்து எடுத்துக் கொள்வார்" என்றார்.

அவர்கள் உடனே யோகியை விழுந்து வணங்கிவிட்டு அங்கிருந்துப் புறப்பட்டுச் சென்றனர்.

பீமன் தெற்குத் திசையை நோக்கிச் சென்றான். விசித்திரபுரி என்ற கிராமத்தில் அவன் தன் மல்யுத்தத் திறமையைக் காட்டியபோது, அந்த கிராமத்து ஆட்களில் ஒருவனான சூலபாணி

"தம்பி! உன்னைப் போன்ற ஓர் ஆள் நான் பல நாள்களாய்த் தேடிக் கொண்டிருந்தேன். நான் மலை ஏறுவதில் விருப்பம் உள்ளவன்! அஞ்சனமலை என்று ஒன்று அருகில்

உள்ளது. அதன்மீது ஏறிப்பார்க்க எனக்கு ஆசை! ஆனால் உன்னைப் போன்ற ஓர் ஆள் என்னுடன் வந்தால் தைரியமாகச் செல்வேன். யார் கண்டது? நீ தேடும் தசரத மலைகூட அங்கிருக்கலாம்!" என்றான்.

உடனே, பீமன் உற்சாகத்துடன் சூலபாணியோடு கிளம்பினான். அந்த மலைப் பிரதேசத்தில் ஏற்பட்ட பல இடையூறுகளை பீமன் தனது புஜ பலத்தினாலும், மல்யுத்தத் திறமையினாலும் வெற்றிகரமாக சமாளித்தான். அதற்குள் ஆறு வாரங்கள் ஆகிவிடவே, பீமன் ஸ்ரீநகருக்கு வந்தான்.

சோமன் கிழக்குத் திசையை நோக்கிச் சென்றான். செல்லும் இடமெங்கும் தசரத மலையைப் பற்றி விசாரித்தும் அவனுக்குத் தகவல் ஏதும் கிடைக்கவில்லை. ஒருநாள், முல்லையாற்றங்கரையில் அமைந்திருந்த மல்லிகாபுரி கிராமத்தில் ஆடிப்பெருக்கு விழாவில் கலந்து கொண்ட சோமன், ஆற்றில் குதித்து நீச்சலடித்துப் பல வித்தைகளைக் காட்டி அங்கிருந்தவர்களை பிரமிக்க வைத்தான். அங்கு இருந்தவர்களில் மேகநாதன் என்பவன்,

"தம்பி! முல்லையாறு கடலில் கலக்கும் இடத்தில், கடலில் மகரத்தீவு என்று ஒரு மிக அழகான தீவு உள்ளது. அங்கு செல்லவேண்டும் என்பது என் நீண்ட நாளைய ஆசை! ஆனால் சங்கமப் பிரதேசத்தில் ஏராளமான முதலைகள் இருப்பதால், யாரும் என்னுடன் வரத்தயாராக இல்லை. நீ வருகிறாயா? ஒருக்கால், மகரத்தீவின் அருகிலே நீ தேடும் தசரத மலை இருக்கலாம்!" என்றான்.

அது கேட்ட சோமன் உற்சாகத்துடன் மேகநாதனோடு புறப்பட்டான். இரண்டு நாள்கள் முல்லையாற்றில் மேகநாதனுடன் படகில் பயணம் செய்த பிறகு, ஆறு கடலில் சேருமிடம் வந்தது. திடீரென ஏராளமான முதலைகள் அவ்விருவரையும் சூழ்ந்து கொண்டு தாக்க ஆரம்பித்தன. சோமன் அத்தனை முதலைகளையும் படகோட்டும் துடுப்பினால் அடித்துப் படுகாயப் படுத்தினான். முதலைகள் இடமிருந்துத் தப்பி, இருவரும் மகரத்தீவை அடைந்தனர்.

அந்தத்தீவில் வாழ்ந்த பழங்குடியினர் இருவரையும் சிறைப் பிடித்துத் தங்கள் தலைவன் முன் நிறுத்தினர். பழங்குடியினத்தினரின் தலைவன் அவர்கள் இருவரையும் நோக்கி,

"மகர தேவி எங்கள் குலதேவதை! அவளுக்கு நாங்கள் நரபலி கொடுப்பது வழக்கம்! உங்களைப் போல் பயணிகளைத்தான் நாங்கள் பிடித்து வந்து பலியிடுவோம்! இங்கு ஒரு முதலைக்குளம் உள்ளது. உங்கள் இருவரையும் அதில் வீசி எறிவோம்! மகரதேவி முதலையின் உருவில் வந்து உங்களைக் கடித்து உண்ணுவாள்!" என்றான்.

அதைக்கேட்டு, இருவருக்கும் இதயமே நின்று விடும் போலிருந்தது. ஆனால் சற்று நேரத்தில் சமாளித்துக் கொண்ட சோமன்,

“தலைவா! முதலில் என்னைக் குளத்தில் அனுப்பு! அங்குள்ள முதலைகளிடமிருந்து நான் தப்பி விட்டால், எங்களை விட்டுவிடு!” என்றான்.


அதற்குத் தலைவனும் சம்மதித்தான். உடனே, சோமன் முதலைக் குளத்தில் வீசி எறியப் பட்டான். அங்கு பல முதலைகள் அவனைக் கடித்துத் தின்ன முயன்றும், சோமன் அவற்றுக்கு மிக சாமர்த்தியமாகப் போக்குக் காட்டி மின்னலென நீந்திக் கரைக்கு வந்துவிட்டான். தலைவனும் மகரதேவி அவர்கள் பலியாக விரும்பவில்லை என்று நம்பி விட்டுவிட, இருவரும் மல்லிகாபுரி திரும்பினர். அங்கிருந்து சோமன் ஸ்ரீநகர் திரும்பினான்.

ராமன் வடக்குத் திசையில் சென்றான். போகுமிடமெல்லாம் தசரத மலையைப் பற்றி விசாரித்துக் கொண்டே சென்றான். ஆனால் யாரும் சரியாக பதில் சொல்லவில்லை. வழியில் ஒரு கிராமத்தில் கோவிந்தன் என்ற வியாபாரி தனக்கு அந்த மலையைப் பற்றித் தெரியும் என்றான். உடனே ஆவலுடன் ராமன் அவனை விசாரிக்க, அவன்,

“என் வீட்டில் ஆறு வாரங்கள் எடுபிடி வேலை செய்! நீ நன்றாக வேலை செய்பவனாகவும், புத்திசாலியாகவும் இருப்பதாகத் தெரிந்தால், பிறகு நான் அந்த மலையைப் பற்றி விவரம் கூறுவேன்!” என்றான்.

உடனே, ராமன் வியாபாரியின் வீட்டில் வேலைக்குச் சேர்ந்தான். நன்கு கல்வி கற்றிருந்த அவனை, அந்த வியாபாரி வேலைகளில் ஈடுபடுத்தினான். தனது தகுதியையும், செய்யும் வேலையையும் நினைத்து ராமன் தினமும் மனம் வருந்தினான். இருந்தாலும் தசரத மலையைப் பற்றிய விவரத்தை அறிய வேண்டும் என்பதற்காக அனைத்தையும் பொறுத்துக் கொண்டான்.

ஆறு வாரங்கள் வேலை செய்து முடித்தப்பின், வியாபாரியிடம் தசரத மலையைப் பற்றி ராமன் கேட்டதும்,



“நீ உழைப்பாளி என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் மாடு போல் உழைத்த உன்னை எப்படி புத்திசாலி என்று கூறுவது? அதனால் என்னுடைய புதிருக்கு நீ சரியான பதில் அளிக்க வேண்டும்.” என்றான். ”மேற்கூறிய நிலத்தை இரண்டு சமமான நிலங்களாகப் பிரிக்கும் வேலியை நீர் அமைக்க வேண்டும். ஒவ்வொன்றும் ஒரே சம ஏக்கர் மற்றும் வடிவத்தைக் கொண்டமைய வேண்டும். உமக்குள்ள நேரம் வெறும் மூன்று செக்கன்கள் மட்டுமே” என முடித்தான்.

ராமனும் அவர் விதிமுறைக்கிணங்க சரியான பதிலளிக்க தசரத மலை

இருக்கும் இடத்தை உரைத்தார். காலக்கெடுவில் பாதி முடிந்து விட்டதால் அலைவதில் பயனில்லை என்று உணர்ந்த அவன் ஸ்ரீநகர் திரும்பத் தீர்மானித்தான்.

ஆக, தசரத மலையைக் கண்டு பிடிக்க முடியாமல், மூவரும் ஸ்ரீநகர் திரும்பினர். நடந்ததை எல்லாம் கேட்ட பின்னர் யோகி,


“முன்னமே நான் சொன்னபடி, தசரத மலையைக் கண்டு பிடிக்க மிகக் கடுமையாக முயற்சிசெய்தவனை ஜமீன்தார் தத்து எடுத்துக் கொள்வார் என்று சொல்லி இருந்தேன். அதன்படி, உங்களில் ராமன்தான் மிகவும் கஷ்டப்பட்டவன்! பீமன், சோமன் இருவரும் உண்மையாகவே பாடுபட்டார்கள் என்றாலும், அவர்கள் செய்தது அவர்களுடைய திறமைக்குப் பொருத்தமான செயல்களே! அபாயகரமான சாதனைகளை அவர்கள் உற்சாகத்துடன் செய்தார்கள். ஒருவன் தனது மனத்திற்குப் பிடித்த வேலையை செய்யும்போது சிரமம் தெரிவதில்லை. ஆனால் ராமனின் நிலை வேறு! நன்கு படித்திருந்த அவனை ஒரு கொத்தடிமை போல் ஈனமான வேலைகளைச் செய்யச் சொன்னான் அந்த வியாபாரி! அவனுடைய மனத்திற்குப் பிடிக்காத, வேலையை அவனுக்கு செய்ய நேரிட்டது. எதனால்? தசரத மலையைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வத்தினால்தான்! மூவரின் நோக்கம் ஒன்றானாலும், அவர்களுக்கு செய்ய நேரிட்ட முயற்சிகள் வேறுபட்டவை! ஆகவே, மூவரில் ராமன்தான் அதிக சிரமப்பட்டான். அவனையே தத்து எடுத்துக் கொள்ள ஜமீன்தார் சிபாரிசு செய்கிறேன்!” என்றார்.

விக்ரமனே இது உங்கள் நேரம் ராமன் அந்த புதிருக்கு என்ன பதிலளித்திருப்பான் என கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் என கூறி நிறுத்தியது வேதாளம்.

தூமி அன்பர்களே நீங்களும் சிந்தியுங்கள் சரியான பதிலை எமக்கு அனுப்பி வையுங்கள்.

## புதிர் 17 – விடைகள்

படம் *A* ஆரம்பத்தில் எடுக்கப்பட்ட சமபக்க முக்கோணி. 1 இலக்கமிடப்பட்டது முதலாவது சிறிய சமபக்க முக்கோணி. *B.C,D* ஏனைய சமபக்க முக்கோணிகள்.






நி.விஜேந்திரா

நீண்ட வீர சைவ பெருமக்களாக வாழ்ந்த தமிழ் மக்கள் மீது பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றால் போல் மதமாற்றங்கள் பல்வேறுபட்ட போதனைகளும் இடம் பெற்று வருவது யாவரும் அறிந்த விடயம் ஆனால் எங்கள் சைவசமயத்தை காத்து பேணி வந்த பல்வேறு சித்தர் பெருமக்களும், ஞானிகளும், அறிவியல் சிந்தனையாளர்களும் வாழ்ந்த புண்ணிய பூமி எமது பூமி.

ஆனால் நம் முன்னோர் வகுத்த நெறிகளையும் வரன் முறைகளையும் இயற்கையோடு இணைந்த வாழ்வியல் முறைகளையும் இன்றைய தலைமுறையினர்கள் ஏற்று வாழ மறுக்கின்ற சூழல் காணப்படுவதால் தான் பல்வேறு வணக்க வழிபாடுகள், மத மாற்றங்களும் இடம்பெற



வழிகோலுகின்றது. அதற்கு நாங்கள் அனைவரும் பொறுப்பு ஏற்க வேண்டியவர்களாகவுள்ளோம். ஏன் என்றால் இன்றைய பெற்றோர்கள் தங்கள் பெற்றோர்கள் காத்து வளர்த்த பல்வேறு அறிவியல் விஞ்ஞான பூர்வமான விளக்கங்கள் வணக்க முறைகளை தம்பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பதில் பின் நிற்பது வேதனைக்குரிய விடயம் அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

1. சாத்வீகமான உணவுப்பழக்க முறை
2. விரத அனுட்டானங்கள்
3. கோயில்களிற்கு செல்லல்

இவற்றில் இன்றைய தலைமுறையினரின் உணவுப்பழக்க வழக்கம் முதன்மையானது. ஏன் என்றால் எங்களுடைய அம்மம்மாக்களோ, அப்பப்பாக்களோ Diet என்ற பெயரில் பணத்தை செலவழித்ததாகவோ அல்லது மருத்துவர்களை நாடிச் சென்ற தாகவோ இன்னும் சொல்லப்போனால் பண்ணைக் கடற்கரையில் நடைப் பயிற்சி மேற்கொண்டதாகவோ நாங்கள் யாரும் அறியவில்லை. ஏன் என்றால் அவர்கள் அனைவரும் அடிப்படையான நல்ல பாட்டி வைத்தியம் என்று சொல்லப்படுகின்ற வைத்திய முறையை தெரிந்து வைத்திருந்த அறிஞர்கள்.

அத்துடன் சைவ சமய விழுமியங்களில் முதன்மையான சாத்வீகமான உணவுப் பழக்க வழக்கங்களை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். இதை

அவர்கள் விரத அனுட்டானங்கள் ஊடாக கடைப்பிடித்தார்கள் விரத முறைகளில் பல்வேறு முறைகள் உள்ளது. சாத்வீகமான உணவுப் பழக்கவழக்கமும் ஓர் விரத முறையே ஆகும். நம் முன்னோர்களை முட்டாள்கள் என்று எண்ணாதீர்கள். அவர்கள் இல்லற யோகிகளாகவும் இல்லற சித்தர்களாகவும் அடிப்படை விஞ்ஞானம் (Basic science) அறிந்தவர்களாகவும் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனாலும் எங்கள் மரபணுக்களில் அவர்களது மரபுகளும் இருக்கிறது. அதனால் தான் எவ்வாறு தான் மதமாற்றங்கள் நடை பெற்றாலும் இருட்டடிப்புக்கள் செய்யப்பட்டாலும் மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்றுக் கொண்டு தான் இருக்கிறது.

அந்த வகையில் தான் இந்த ஐயப்பன் விரதமும் காணப்படுகிறது. மாதங்களில் சிறந்த மாதங்களாகிய கார்த்திகை, மார்கழி இந்த இரண்டும் சைவ சமயத்தவர்களிற்கு மிக உகந்த மாதங்கள். அந்த இனிய நாளிலே தமிழ் கார்த்திகை மாதத்திலே தொடங்கி தைத்திருநாள் தமிழிற்கு தை முதலாம் திகதி வரைக்கும் இந்த ஐயப்பன் வழிபாடு நடைபெறுகின்றது. இதற்கிடையில் பிள்ளையார் பெருங்கதை, திருவெம்பாவை போன்ற விரதங்களும் வழிபாடுகளும் நடைபெறுகின்ற இனிமையான காலம் எனவே எமது சைவ இளைஞர்கள் இந்தக் காலப்பகுதியில் சாத்வீகமான உணவுப் பழக்கவழக்கங்களை சிக்கனப்பிடிக்கின்றார்கள். இவ்விரதம் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனுஷ்டிக்கின்றார்கள்.

ஆனாலும் இன்றைய காலத்தில் இளம் சமூதாயத்தினருடைய பங்களிப்பு அதிகமாகும். இதனால் எமது சைவ சமயத்தில் “மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்” என்ற புராண வரிகளிற்கு இணங்க சமூதாய சீர்திருத்தங்கள் நடைபெறுவதை காணக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக சென்ற ஆண்டு தமிழ் பத்திரிகையில் நான் படித்திருந்தேன் சட்ட வல்லுணர்களால் கூறப்பட்ட விடயம் இந்த காலப்பகுதியில் குற்றவியல் நடவடிக்கை குறைவாக காணப்படுவதாக. இதை பலரும் பல்வேறு விதமாக விமர்சித்தாலும் பொதுவான பார்வையில் ஒரு நேரான சிந்தனையாக பார்த்தால் ஒரு சமூக சீர்திருத்தம் நடைபெறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சைவப்பெருமக்களான இளைஞர்கள் நல்ல குரு நாதரை நாடி அவர்கள் அவருடைய ஆசீர்வாதத்துடன் தங்களின் பெற்றோரின் பாதங்களின் வீழ்ந்து வணங்கி நல்லதோர் கைங்கரியமான புனித மாலை அணிந்து நாற்பத்து எட்டு நாட்கள் மண்டல விரதம் பூண்டு சிற்றின்பங்களை விடுத்து பேரின்ப பெருமானாகிய இறைவனை வழிபடுகின்றார்கள்.



உண்மையிலேயே இந்த ஐயப்பன் வழிபாட்டில் உள்ள அனைத்து முறைகளும் பெரும் அறிவியல் பூர்வமான விடயங்களாகும். (Multi Discipline) இந்த நாற்பத்தெட்டு நாட்கள் என்பது எண்களின்படி மிகவும் உன்னதமான நாட்கள். இந்த நாட்களில் அவர் எந்த நோக்கத்தை நினைத்து மாலை அணிகின்றாரோ அந்த நோக்கம் நிறைவேறுவது மரபு. எனவே இதற்கு அத்தனை ஐயப்பன் பக்தர்களும் சாட்சிகளாவர்கள்.

அந்த வகையில் ஒருவர் குடிப்பழக்க வழக்கங்களிற்கு ஆளாகியிருந்தால் அவர் இந்த நாற்பத்தெட்டு நாட்களும் அதைத்தவிர்க்க வேண்டும். அல்லது இந்த பழக்கவழக்கங்களிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணத்தில் தொடங்குவாராயில் அவருடைய மூளையின் கலங்களில் மாற்றம் ஏற்படுகின்றது. அதாவது எண்ணங்கள் மாற்றம் அடைகின்றது. இதனை உளவியலில் எண்ணமாற்று சிகிச்சை (cognitive behavior therapy ) என்று அழைப்பார்கள் இதை தான் அன்றே எங்கள் ஆன்றோர்கள் மண்டல விரதம் 48 நாட்கள் என்ற எண்ணிக்கையில் வைத்துள்ளார்கள்.

உதாரணமாக ஒரு இறை விக்கிரகம் பிரதிஷ்டை செய்கின்ற போது அதற்கு எண்ணெய்க்காப்பு வைக்கின்ற மரபு காணப்படுகின்றது. அவ்வாறு எங்களது கரங்களால் எண்ணெய்யை எடுத்து இறை திருமேனியில் எண்ணெய்யை ஊற்றுகின்ற கைங்கரியத்தை செய்பவர் 48 நாட்கள் சைவ ஆசாரம் பேணி சாத்வீகமான உணவுப் பழக்கவழக்கத்தை கைக்கொள்ள வேண்டும்.

ஆராய்வோம்...





# சித்திராங்கதா

காவ்யமோகன்

## நட்புறவு என்னும் ராஜதந்திரம்

“ராஜ வல்லமை கொண்ட சுயபுத்தி மிகுந்த ஒருவன் அரியணையை அலங்கரிக்க வேண்டும். சங்கிலிய குமார பூபதி அரியணையில் உள்ளவரை நடப்பது இராஜமந்திரியாரது ஆட்சியாகும். அப்படியிருக்கையில் அவரது சதித்திட்டங்களை எம்மால் வெல்வது சாத்தியமல்ல என்பதே சத்தியமாகும் தேவி” என்று உறுதியான குரலில் சொல்லிக் கொண்டிருந்தான் வன்னியத்தேவன்.

பொறுமையுடன் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த சித்திராங்கதா இப்போது கேட்டாள்.

“ஆட்சியிலிருந்து மன்னரை அப்புறப்படுத்துவது ஒன்றும் எம்மால் ஆகக்கூடிய காரியமல்லவே வன்னியத்தேவரே! அப்படியே நிகழினும் தாம் கூறிய சுயபுத்தி மிக்க வேந்தரை எங்ஙனம் அறிவீர்? ஒருவேளை தாம் தங்களை எண்ணித்தான் அப்படிக் கூறினீர்களோ? தங்களது அரசியல் அவாவிற்கு என்னை உபயோகப்படுத்திக் கொள்ள எண்ணம் கொண்டீரோ?” என்று தன் சந்தேகத்தை தயக்கமின்றி கேட்டாள் சித்திராங்கதா.

“தேவி! இது என்ன கூறுகிறீர்கள்? என் அரசியல் அவா என்று எனக்கெதுவுமல்ல தேவி. நான் ஒரு சிற்றரசன். யாழ் அரியணையில் அமருவது பற்றி எனக்குத் துளியளவும் எண்ணமோ ஆசையோ கிடையாது. நான் அத்தகைய ஆசை கொள்ளவும் தகுதியிலேன் ஆவேன் தேவி! தங்கள் ஆடற்கலை மீது கொண்ட பிரியத்தினால் ஆடற்கலையின் அபூர்வராணிக்கு நிகழப்போகிற ஓர் அநியாயத்தை அறிந்தும் நான் அமைதியாய் இருத்தல் ஆகாது என்கிற நல்லெண்ணம் கருதியே இதனை தங்களிடம் உரைக்க வந்தேன். அன்றி தாங்கள் கூறுவது போல் ஏதுமில்லை தேவி” என்று அவசரவசரமாக கூறிமுடித்தான் வன்னியத்தேவன்.

“பிறகு சுயபுத்தியிற் சிறந்த வேந்தன் என்று யாரைப்பற்றி புகழ்ந்துரைத்தீர்கள் வன்னியத் தேவரே?”


“தஞ்சை வீரரை பற்றியே அங்ஙனம் கூறினேன் தேவி”

வன்னியத்தேவனின் இக்கூற்று சித்திராங்கதாவிற்கு சற்றும் எதிர்பாராத வியப்பை உண்டாக்கியது.

“என்ன வன்னியத்தேவரே? தாமே ராஜமந்திரியாரது திட்டத்தை வெற்றியாக்க வழி கூறுகிறீர்களா? தஞ்சை வேந்தரை அரசராக்குவதுதான் ராஜமந்திரியாரது திட்டம் என்று சற்றுமுன்தானே கூறினீர்கள்?”

"ராஜமந்திரியாரது திட்டமும் அதுதான் தேவி. ஆனால் ராஜமந்திரியார் அதனை சங்கிலிய குமாரரை கொண்டு சாதிக்க விரும்புகிறார். நான் சங்கிலிய குமாரரை எதிர்த்து சாதிக்க வேண்டும் என்கிறேன். அன்றி தற்சமயம் நாட்டிற்குத் தேவையான இணையற்ற தலைவன் தஞ்சைவீரர் வருணகுலத்தான் என்பதில் எனக்கும் மறுப்பில்லை தேவி"

"ஆனால் எனக்கு மறுப்பிருக்கிறது வன்னியத்தேவரே. எங்ஙனம் தஞ்சைவீரர் அரியணை ஏறினாலும் அதன் அடுத்தபடி ராஜமந்திரியாரின் எண்ணம் கைகூட வெகு



திவாகரன்

இலகுவாகிவிடுமல்லவா? பிறகு எதற்கு இந்த வீண் திட்டம்?"

"தேவி, அந்த விடயத்தில் தான் தாங்கள் தெளிவாக சிந்திக்க வேண்டும். தஞ்சை வீரர் சங்கிலியகுமாரர் போல் இல்லையயல்லவா? அவர் அறிவாற்றல் மிகுந்தவர். அப்படியொரு செயலை தஞ்சைவீரர் ஆற்றமாட்டார் என தாங்கள் அவர் மேல் நம்பிக்கை கொள்ளவில்லையா தேவி?"
என்றான் வன்னியத்தேவன்.

"நம்பிக்கை கொள்கிறேன் வன்னியத்தேவரே, ஆனால் அரச காரியங்கள் உண்டாக்க வல்ல சங்கடங்கள் குறித்தும் எண்ணுகையில் தான் அச்சம் கொள்கிறேன்."

"அதனால்த்தான் சங்கிலியகுமாரரை எதிர்த்து அரியணை ஏறியாக வேண்டும் என்கிறேன்.
சங்கிலிய குமாரரோடு நட்புறவு கொண்டிருந்தாலன்றோ அப்படியொரு தர்ம சங்கட சூழ்நிலைக்கு தஞ்சை வீரர் உள்ளாகக் கூடும். அதுவே ராஜமந்திரியார் தம் திட்டத்தை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லவும் வல்லதாகிவிடும். அதனால்த்தான் கூறினேன் மாமன்னரை எதிர்த்தே தஞ்சைவீரர் அரியணையில் அமர வேண்டும் என்று"

"ஆனால் வன்னியத்தேவரே, எதற்கு இந்த விபரீதம்? தஞ்சைவீரர் அரியணையில் ஏற நேரா விட்டாலே இத்தகைய தேவையற்ற சிக்கல்களை நாம் தவிர்த்து விட இயலுமல்லவா?"

"தேவி தாம் தேவையற்ற அச்சம் கொள்கிறீர்கள். தாம் நாட்டிய கலாராணி ஆவீர்கள். இந்நாடு மீதும் இந்நாட்டு மக்கள் மீதும் தாம் கொண்ட கரிசனம் குறித்து தங்கள் கலையே பேசுமல்லவா? தங்களது தன்னல அச்சத்திற்காக நாட்டுமக்களிற்கு நன்மை பயக்கும் காரியத்தை நடத்த மறுக்கலாமா தேவி?"

என்று வன்னியத்தேவன் கூறிய வார்த்தைகளால் நெகிழ்ந்து போனாள் சித்திராங்கதா. வருணகுலத்தான் அரியணையில் ஏறுவது தன் உள்மனதிற்கு ஆபத்தாகப் பட்டாலும் அதுவே யாழ்மக்களிற்கு பெருநன்மை பயக்க வல்லது எனவும் முழுமையாக நம்பத்தொடங்கினாள்.

"ஆனால் தனியாளாக தஞ்சைவீரர் எங்ஙனம் சங்கிலியமகாராஜாவை எதிர்க்க இயலும் வன்னியத்தேவரே?"

"தனியாள் என்று தஞ்சைவீரரை கூறுதல் முறையோ தேவி? அவர் வீரத்திறன் நான் சொல்லியா தங்களிற்குத் தெரிய வேண்டும்? அத்தோடு ஐயாயிரம் வீரர்படை கோப்பாய் மாளிகையில் தங்கியுள்ளனரே இதைவிட யாழ் வேந்தரை எதிர்க்க வேறுபலம் வேண்டுமா தேவி?"

"ஆனால் அப்படை வீரர்கள் அனைவரும் பறங்கியர்களை எதிர்க்க புறப்பட்டு வந்த உதவிப்படை வீரர்கள் அல்லவா?"

“அது இப்போது அநாவசியம் என்று தான் கூறுவேன் தேவி. அதைவிட இதுவே மிகமுக்கியமானதாகும்.”

“என்ன கூறுகிறீர்கள் வன்னியத் தேவரே? பறங்கியரை எதிர்ப்பது அநாவசியமா? தங்கள் இக்கூற்று எனக்கு ஐயத்தை உண்டுபண்ணுகிறது.”

“தேவி, கொஞ்சம் பொறுமையோடு சிந்தித்துப் பாருங்கள். நான் கூற விளைவது தங்களிற்கும் புரியும். பறங்கியரது போர்க் கப்பல்களும், பீரங்கிகளும் மன்னார் குடாக்கடலை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனவாம். எத்தனை பெரிய படையாயினும் அந்தப் பீரங்கிகளுக்கு முன்னால் முன்னேறினால் அனைத்துமே தீக்கிரையாவது தான் உறுதி. இந்த சமயத்தில் ஐயாயிரம் படைவீரர்களை பறங்கியரை எதிர்த்து நாம் அனுப்ப நேர்ந்தால் பெரும்படையினை அடியோடு நாம் இழக்கவேண்டியது தான். ஆவேச பேச்சுக்களை விடுத்து அறிவாற்றலோடு சிந்தித்துப் பார்த்தால் பறங்கியனை எதிர்ப்பதற்கு இது தக்கசமயமல்ல. இது தகுந்த முறையுமல்ல என்று தங்களிற்கே புரியும் தேவி.”

“அதற்காக பறங்கியனிடம் பணிந்து வாழ்வதே சாலச்சிறந்தது என்பீர்களா? அப்படி எதற்காக பெரும்படை காத்து நாடாள வேண்டும்? படைவீரர்கள் போரிட முன்னர் அவநம்பிக்கை கொண்டு முடிவுரைப்பது தம் வீரத்திறத்திற்கு இழுக்கு என்று தோன்றவில்லையா தமக்கு?”

“தேவி, பறங்கியனுக்கு பணிந்து வாழ்வதை விட உயிரை விடுதல் மேல் என்று நானும் ஏற்கிறேன். பணிந்து வாழ நான் கூறவில்லை. அவன் எம்மைப் பகையாய் நினைத்தால் நாம் அவனை பகடையாக்க வேண்டும் என்றே கூறுகிறேன். வீரத்தை விட எம் மதிநுட்பத்தை கொண்டே அவனை வென்றாக முடியும் என்று நான் நம்புகிறேன். அவன் எங்ஙனம் எம்மிடம் நட்புறவு கொள்ள விளைகிறானோ அதே நட்புறவினை நாம் ராஜதந்திரமாக கொள்ளவேண்டும் என்கிறேன். தேவி, ஒரு விடயத்தை சிந்தித்துப் பாருங்கள். அவனிற்கு நம் மக்களை ஆள வேண்டிய அவசியமெதுவுமில்லை. அதில் அவன் நாட்டம் கொள்ளவும் இல்லை. தன் மொழியே புரியாத ஒரு மக்கள் கூட்டத்தின் தலைவனாய் தான் இருக்க அவனிற்கு எவ்வித எண்ணமும் இல்லை. அவனது ஒரே நோக்கம் வர்த்தகம். அதற்காகவே அவன் எல்லாவற்றையும் செய்கிறான். தீவிரமான தன் வர்த்தகப் பயணத்தில் தடை எது வரினும் அதை எதிர்க்க எது வேண்டுமானாலும் செய்வான். அதை புரிந்து கொள்ளாமல் எம் நாடை நாம் ஆளும் உரிமைக்காக அவனிற்கு எதிராய் போர்க்கொடி தூக்குவது தேவையற்ற இழப்புகளையே எம்பக்கம் உண்டாக்கும். மாறாக எம் மதிநுட்பம் கொண்டே அவனை விரட்டியடிக்க முடியும் என்கிறேன். அதற்கு தகுதிமிக்க வேந்தர் அரியணையில் இருக்கவேண்டியது அவசியமாகும் தேவி”

என்றான் வன்னியத்தேவன்.

"தாங்கள் கூறுவது பெருங்குழப்பம் அளிக்கிறது வன்னியத்தேவரே அப்படியாயின் தெற்கின் இராச்சியங்களை பறங்கியர்கள் இன்று முழுவதுமாய் தம் ஆதிக்கத்திற்குள் அடக்கி வைத்துள்ளார்களே, அது எதற்காகவாம்?
பிறகு எப்படி ஆளும் நோக்கம் அவர்களுக்கல்ல என்று உரைக்கிறீர்கள்?"

"அது அவர்கள் வீணாய் பகை வளர்த்துக் கொண்டதால் ஏற்பட்ட அவலமாகும் தேவி. நட்புறவோடு இருந்தவரை பறங்கியனிற்கு கூட அவ்வெண்ணம் இருந்ததாய் நான் அறியேன். வீணாய்ப் போர்க்கொடி தூக்கி வீணாகிப் போயினர். அதே அவலம் யாழ் இராச்சியத்திற்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகவே நான் கூறுகிறேன்."

சித்திராங்கதாவின் மனதிற்குள் வன்னியத்தேவனது வார்த்தைகள் பல கேள்விகளை உண்டுபண்ணிக் கொண்டிருந்தாலும் எல்லாவற்றிற்கும் வன்னியத்தேவன் பதிலுரைத்துக்கொண்டே இருந்தேன். மேலும் பல வியூகங்கள், உபாயங்கள் என அவன் நினைத்த விதத்திலே சித்திராங்கதாவை தன் மாயவலைக்குள் முழுவதுமாய் சிக்கவைத்து விட்டான் என்றே சொல்ல வேண்டும். வன்னியன் விரித்த வலையில் சித்திராங்கதா சிக்கிக்கொண்டது போல் நல்லூர் அரசவை நோக்கியும் ஒரு நச்சு வலையினை தூதுவன் வடிவில் அனுப்பி வைத்திருந்தனர் பறங்கியர்.

வலை விரியும்...

## மின்னல் மூலம் மாட்டுச் சாணத்தில் இருந்து வெளியாகும் மீத்தேனை குறைக்க புதிய தொழில்நுட்பம்

நோர்வேயை சேர்ந்த நிறுவனம் ஒன்று கால்நடைகளின் சாணத்தில் இருந்து வெளியேறும் மீத்தேன் வாயுவை செயற்கை மின்னல் மூலம் குறைக்கும் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் 99% மீத்தேன் மற்றும் 95% அமோனியா குறைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 | | 4 | 5 |
| 6 | | | | 7 | | | |
| 8 | | 9 | 10 | | | 11 | |
| 12 | | | | | 13 | | |
| 14 | | | | | 15 | 16 | |
| | | | | | 17 | | 18 |
| 19 | 20 | | 21 | 22 | | | |
| | 23 | | | 24 | | | |

# குறுக்கெழுத்துப்போட்டி 35

### இடமிருந்து வலம்

1- அண்மையில் இலங்கையர் ஒருவர் எரித்துக் கொலை செய்யப்பட்ட நாடு
4- அடிமைப்பெண்
6- காற்று
7- கற்பவன்
8- தங்கத்தின் அளவீடுகளில் ஒன்று
11- நோய் (திரும்பி)
12- சிக்கனவாதி (திரும்பி)
14- ஒருவகை இரசாயன சேர்வை (குழம்பி)
15- இடையூறு
17- வாசம்
19- உலகம்
21- மின்னலுடன் வருவது (திரும்பி)
23- நிறை (திரும்பி)
24- சீனி (திரும்பி)

### மேலிருந்து கீழ்

1- தேவாலயங்களில் வழங்கப்படுவது
2- கடற்கரைகளில் கிடைப்பது
3- மாரீசன் சீதையை ஏமாற்ற எடுத்த வடிவமாக இராமாயணம் சொல்வது (தலைகீழ்)
4- பெண்களின் ஒருவகை உடை
5- மரத்தில் சுரக்கும் ஒரு திரவம் (தலைகீழ்)
9- இந்தியாவில் உள்ள புராதன பௌத்த தூபி
10- திரும்ப திரும்ப (குழம்பி)
13- சொற் போர் (தலைகீழ்)
16- தலைமயிர் (தலைகீழ்)
18- பண அளவீடுகளில் ஒன்று (தலைகீழ்)
20- பதில்
22- உணவு

## குறுக்கெழுத்துப்போட்டி - 34 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சா | 2 ரா | ம் | 3 ச | ம் | | 4 ழ் | 5 கூ |
| 6 ப | ணி | | ங் | | 7 க | த | லி |
| வி | | 8 ர் | க | க் | ய | இ | |
| 9 மோ | 10 த | க | ம் | | ல் | | 11 அ |
| 12 ச | ந் | தி | | 13 நா | | 14 ப | தி |
| 15 ன | தி | மு | பு | | 16 வ | டி | கா |
| 17 ம் | ர | கா | | 18 சா | ண் | | ர |
| | 19 ம் | ம | க | | டி | | ம் |

சரியான விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

# ஈழச் சூழலியல்

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

## பொசுபரசு

பொசுபரசு தாவரங்களுக்கு தேவையான இன்னுமொரு போசணை பொருளாவதுடன் இதுவும் பசளையாக இடப்படுகின்றது.ஆனால், நைற்ரேற்றை விட பொஸ்பேட்டின் இரசாயனம் வித்தியாசமானதாகும். நைற்ரேற் நீரிற் கரையும் அதேவேளை, பொஸ்பேட் மண்ணிலுள்ள கல்சியம், மக்னீசியம், அலுமினியம், இரும்பு போன்ற நேரயன்களுடன் சேர்ந்து தொடரான சேர்வைகளை உருவாக்கும். இச்சேர்வைகள் நீரில் அரிதாகவே கரையும். இதனால் பொசுபரசு பசளை இடப்பட்ட மண்ணிலிருந்து ஓடும் மேற்பரப்பு நீரில் குறைந்தளவான கரைந்த பொசுபரசே காணப்படும்.

இலங்கையில் வருடம் முழுவதும் பல இடங்களில் இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்து நாம் சேதனப்பசளைகளை பற்றி ஆராய்வோமேயானால் அதன் பின்புலத்திலும் எதிர்மறையான விடயங்கள் இல்லாமலில்லை.

இலங்கையில் காணப்படும் பெரும்பாலான சேதனப் பசளைகள், மிருகங்களின் கழிவுகளில்



இருந்து பெறப்படுகின்றனவாகும். பெரும்பாலான மாடுகள் எருமைகள் புற்தரைகளில் சுயாதீனமாக மேயும் போது அவற்றின் சாணம் நிலமெங்கும் பரவிக் காணப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், நீர் மாசடையாது. எனினும் சில சந்தர்ப்பங்களில் மிருகங்களின் கழிவு நீர்நிலைகளின் அருகே காணப்படும். மழை காலத்தில் இக்கழிவு நீருடன் சேர்ந்து நீரிற்கு போசணையை சேர்க்கும். வெப்ப காலத்தில் நீர் ஆவியாவதால், போசணையின் செறிவு கூடி நற்போசணை அதிகரிக்கும்.

நீர் மாசடைதல் பல அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு ஒரு ஆபத்தான தோற்றப்பாடாக பார்க்கப்படுகிறது.. இந்நாடுகளில் பெருந்தொகையான கால்நடைகள் சிறிய புற்தரைகளில் அடைக்கப்பட்டு வளர்க்கப்டுகின்றன. இவ் விலங்குகளுக்கு உணவாக தானியங்கள் வெளியில் இருந்து கொண்டு வரப்படுகின்றன. கடலை, தானியங்கள் சோயா பீன்ஸ் ஆகியவற்றில் உள்ள 50 % - 75% ஆன பொஸ்பரஸ் Phalate எனும் வடிவில் காணப்படுகிறது. இவை விலங்குகளினால் ஜீரணிக்க முடியாது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் உட்கொள்ளப்பட்ட பொஸ்பரசு கழிவாக வெளியேற்றப்படுகிறது. இந்த நிலத்தில் தொடர்ச்சியான கால்நடை வளர்ப்பானது நிலத்திலுள்ள பொஸ்பரசின் அளவை அதிகரிக்கச் செய்யும். இது நீரை மாசு நிலைக்கு கொண்டு செல்லும். இலங்கையில் பல பயிர் வகைகளுக்கு விலங்கதுகளின் சாணம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனினும் வருடாந்தம் இந்த வகையில் கொண்டு வரப்படும் பொஸ்பரசின் அளவு சூழலுக்கு ஆபத்தாக அமையுமென கருதமுடியாது.

அனைத்து தாவரங்களும் 17 வகையான போசணைச் சத்துக்களையும் கொண்டிருப்பதனால், உதாரணமாக பசு போன்றதொரு விலங்கு, தாவரப் பாகங்களில் பெரும்பாலானவற்றை உண்ணும் போது நிச்சயமாக சாணத்தில் அனைத்து தாவரங்களுக்கான போசணைச்சத்துக்களும் காணப்படும். இது மண்ணில் சிதைவடையும் போது சேதன வடிவிலுள்ள போசணை மூலகங்கள் மண்ணில் விடுவிக்கப்படும். இதனையடுத்து, இரசாயனப் பசளைகளிலுள்ள





போசணைச்சத்துக்களில் ஏற்படும் மாற்றங்களே இதிலும் இடம்பெற்று, நீர்நிலைகளை மாசுபடுத்தும். சேதனப் பசளைகளிலுள்ள சாதகமானதொரு அம்சம் யாதெனில் அவை மெதுவாக சிதைவடைந்து, குறிப்பிட்ட காலத்தில் குறைந்தளவான போசணைச் சத்துக்களை விடுவிப்பதாகும். இதனால், சுற்றாடலில் இழக்கப்படும் போசணைச் சத்துக்களின் அளவு குறைவாகக் காணப்படும்.

ஆனால் ஒரே தடவையில் அதிகளவான சேதனப்பசளைகளை இடும் போது இந்நிலை இல்லாதிருக்கலாம். மிருகங்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் விலங்குளின் சாணம் என்பவற்றில் சிறிய அளவில் ஆபத்தான பார உலோகங்களான ஆசனிக் மற்றும் கட்மியம் என்பன காணப்படுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. கிரமமாக அதிக அளவில் விலங்குகளின் சாணம் விவசாய நிலங்களுக்கு சேருமாயின் சூழலுக்கு ஆபத்தாக அமையும். சேதனப்பசளைகள் சூழலுக்கு உகந்தது என்பதும் இரசாயன பசளைகள் உகந்ததல்ல என்பதும் ஒரு பிழையான எண்ணக் கருத்தாகும். சேதனப் பொருட்கள் மிக மெதுவாகவே பிரிகை அடைவதால் அதிலிருந்து விடுவிக்கப்படும்



போசணப் பொருட்களின் அளவும் குறைவாகும். இதன்காரணமாக நீருடன் கலக்கும் போசணப் பொருட்களின் அளவும் அதற்காக எடுக்கும் நேரத்துடன் ஒப்பிடுகையில் அனேக இரசாயன பசளைகளைவிட குறைவானதாகும்.

பீடைநாசினிகளினால் நீர் மாசடைதல் ஆயிரக்கணக்கான வருடங்களாக மனிதர்கள் இயற்கையான பீடைநாசினிகளைப் பயன்படுத்திய போதிலும், நோய்கள், பூச்சி களின் தாக்கம், களைத்தொற்றல்கள் என்பனவற்றில் இருந்து பயிர் களைப் பாதுகாப்பதற்கு செயற்கை பீடைநாசினிகளைப் பயன்படுத்துவது அண்மையில் ஏற்பட்டதொரு நிகழ்வாகும்.

பங்கசுநாசினிகள், பூச்சிநாசினிகள், நெமற்றோட்டு நாசினிகள், களை நாசினிகள் என்பன பொதுவாக பீடைநாசினிகள் என அழைக்கப்படுகின்றன. சில காலத்திற்கு முன்னர் செயற்கைப் பீடைநாசினிகளை அபிவிருத்தி செய்த போது, பீடைகளை விரைவாகவும், குறைந்த செலவிலும் அழித்து, பட்டினியால் வாடும் உலகில் உணவுற்பத்தியை அதிகரிப்பதற்கான ஒரு மைல்கல்லாக கட்டியம் கூறி பெருமளவில் வரவேற்கப்பட்ட போதிலும், தற்போது பெரும்பாலான பீடைநாசினிகள் மாசுபடுத்திகள் எனக்கருதப்படுகின்றன. இவை சுற்றாடற் தொகுதியைக் குழப்புகின்றன. இரை ஊணுன்னி தொடர்பினைக் குழப்புகின்றன. உயிரியற் பல்லினத்தன்மையை இழப்பதற்கு வழிவகுக்கின்றன. மனிதர்களிற்கும் ஏனைய உயிரினங்களிற்கும் ஆரோக்கியப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

பீடைநாசினிகளை பின்வரும் நான்கு பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

1. குளோரினேற்றம் செய்யப்பட்ட ஐதரோகாபன்கள்.

உதாரணம் - டி. டி ரி. (டைகுளோரோ டைபீனைல் றைகுளோரோ ஈதேன் - னுனுவு

2. ஓகனோபொஸ்பேற்றுகள்.

உதாரணம் - மலத்தியன்

3. காபமேற்றுகள்.

உதாரணம் - காபொறில்

4. பார உலோகங்களைக் கொண்ட பொருட்கள்

உதாரணம் - போடெக்ஸ் கலவைகள்

DDT ஆரம்ப பீடைநாசினிகளில் ஒன்றாகும். 1945 இல் சுவிற்சர்லாந்தில் போல் முல்லர் அவர்களினால் இது அபிவிருத்தி செய்யப்பட்டது. இதற்கென அவர் நோபல் பரிசைப்

பெற்றுக் கொண்டார். இதனையடுத்து, ஒகனோபொஸ்பேற்றுக்களும், காபமேற்றுக்களும் அறிமுகப் படுத்தப்பட்டன.

பீடைநாசினியொன்றின் செயற்பாட்டு மூலகம், அதனை உருவாக்கும் போது பயன்படுத்தப்பட்ட சேர்மானப் பொருட்கள், ஒளியிரசாயனவியலில் உருவாகும் படியிறக்கமடையும் பொருட்கள், மண்ணில் படியிறக்க மடையும் இரசாயன, நுண்ணுயிர் பொருட்கள் என்பன மேற்பரப்பு நீரோட்டம், ஊடுவடிதல் என்பனவற்றின் மூலம் நீர் நிலைகளை அடையலாம். ஒரு பீடைநாசினி அல்லது அதன் சிதைவடைந்த பாகம் நீரிற் கரையாத போதிலும் கூட, அவை ஆழத்திற் சென்று நீர் நிலைகளின் அடியிற்



படிந்துள்ள அடையல்களுடன் சேரும் போது, அங்கு நிலவும் தாழ்த்தப்பட்ட நிலைமையில் கரையத் தொடங்கும். அவ்வாறான அடையல்களை உதாரணமாக மீன்கள் போன்றன உண்ணும் போது, அவை மனித உடலை அடைந்து உணவுச் சங்கிலியில் மேல்நோக்கிச் செல்லும்.

ஆராய்வோம்............


# நீங்களும் இணையலாம்!!!

எழுத்துத்துறையில் ஆர்வமுள்ளவரா?

புகைப்படங்கள் எடுப்பதில் பிரியமுள்ளவரா?

ஓவியங்கள் வரைதலில் முனைப்பானவரா?

பத்திரிகை வடிவமைப்பில் நாட்டமுள்ளவரா?

**thumi2016@gmail.com**
**0777840205**

துமி மின்னிதழில் இணைந்து பணியாற்ற அன்புடன் அழைக்கிறோம். மேற்குறித்த மின்னஞ்சல் முகவரியுடன் அல்லது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.




# பழைய பாட்ஷாவாக வருவாரா...?

எஸ்.எஸ்.நுஜன்

தற்கால கிரிக்கெட் உலகில் விராட் கோலி, ஸ்டீபன் ஸ்மித், கேன் வில்லியம்சன் மற்றும் ஜோய் ரூட் இடையே யார் சிறந்த மட்டையாளர் என்பதற்கான நான்முனை போட்டி நிலவுகிறது. இதில் டெஸ்ட் போட்டியில் ஸ்மித்தும் ஒருநாள் ஆட்டங்களில் கோலியும் மற்றைய மூவரையும் பின்னுக்குத் தள்ளினாலும் மூன்று விதமான ஆட்டங்களிலும் சேர்த்து யார் என்பதில் வேறு வேறு தெரிவுகள் இருக்கிறது. இங்கிலாந்தின் ***Tactical*** முடிவினால் இந்த நால்வரில் ரூட் மட்டும், தற்போது (2019க்கு பின்) ரி20 சர்வதேச ஆட்டங்களில் விளையாடுவதில்லை.

இப்படியான நிலையில் கடந்த 2019ம் ஆண்டு ஆஷஸ் டெஸ்ட் தொடரில், ஜோஸ் ஹசல்வூட் மற்றும் பட் கம்மின்ஸ் கூட்டணி ரூட்க்கு மிகப்பெரும் நெருக்கடியை கொடுத்தது. இதனால் ரூட் தனது கால்களை சற்று முன்னதாக அசைந்து சற்று நேரம் எடுத்துக் கொள்ள பார்த்தார். ஆனால் அது சரி வரவில்லை. அதன் பின்னர் 2020ம் ஆண்டு, ரூட்க்கு அறிமுகமான வருடங்களுக்கு பிறகு (2012-டெஸ்ட்,2013-ஒருநாள்) சதம் அடிக்காத முதல் வருடமானது.






2021 இல் விஸ்வரூபம் எடுத்த ரூட்க்கு டெஸ்டில் சதங்களும் இரட்டை சதங்களும் கிடைத்ததோடு ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில் விளையாடிய இரு போட்டியிலும் ஆட்டமிழக்கவில்லை. அதுமட்டுமின்றி இங்கிலாந்து சார்பாக ஒரு வருடத்தில் அதிக டெஸ்ட் ரன்கள் எடுத்த வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். அத்துடன் ரூட் அதிக நிமிடங்கள் களத்தில் துடுப்பாடிய முதல் ஏழு சந்தர்ப்பங்களில் நான்கு தடவைகள் இந்த வருடம் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் வைத்து இரட்டை சதத்துடன் இவ்வருடத்தினை ஆரம்பித்த ரூட் இந்தியாவிலும் இரட்டை சதம் விளாசினார்.



ஜோய் ரூட் தான் பெறும் அரைச்சதங்களை சதங்களாக மாற்றுவதில் தடுமாறுபவர் ஆனாலும் இந்த வருடம் இந்த தவறையும் திருத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வருடம் ரூட் டெஸ்டில் அசத்தி வர இதுவரை சதங்கள் குவித்து வந்த கோலியும் ஸ்மித்தும் கடந்த வருடங்களில் சதம் பெறுவது குறைந்து விட்டது.

இதுவரை அவுஸ்திரேலிய மண்ணில் சதம் அடிக்காத ரூட், இம்முறை நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆஷஸ் தொடரின் முதலாவது




டெஸ்டில் முதல் இன்னிங்சில் ரன் ஏதும் எடுக்காது ஆட்டமிழந்தார், ஆனாலும் இரண்டாம் இன்னிங்ஸில் 83 எடுத்து அரைச்சதம் கடந்தார். இந்த 2021 கலக்கி வரும் இவர், இம்முறை ஆஸி மண்ணில் சதம் அடிப்பாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.